பக்கங்கள்: பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 30 திங்கட்கிழமை (13-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:169

## புலிகள் - படையினர் உரையாட தனியான 'வயர்லெஸ்' வசதி

கொழும்பு,மே13

அரசுப் படையினரும் புலிகள் இயக்கப் போராளிகளும் நேரடியாகத் தொடர்புகொண்டு உரையாடுவதற்கு வசதியாகப் பொதுவான தொலைத் தொடர்பு அலைவரிசை ஒன்றை இராணுவம் ஒதுக்கவுள்ளது. இதன்மூலம் இரு தரப்பினரும் அடிக்கடி உரையாடி பரஸ்பரம் நட்புறவை வளர்க்க முடியும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்டின் பெர்னாண்டோ இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து நீண்டநாள்கள் கடந்துவிட்ட பிறகும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஊடாக இன்னமும் படையினர் பயணம் செய்யாமல் இருப்பது ஏன் என்பதற்கான காரணத்தை ஒஸ்டின் பெர்னாண்டோ பி.பி.ஸி. செய்தியாளரிடம் விளக்கினார்.

அவர் கூறியதாவது:-

படையினருக்கும் புலிகளுக்கும் இடையே முன்னர் நீண்டகாலமாக

(10ஆம் பக்கம் பார்க்க)

## 'ஜெயலலிதா இலங்கை வந்தால் தீக்குளிப்பேன்'

கொழும்பு,மே13

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கைக்கு வருகை தந்தால் தீக்குளிப்பேன்.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.தென்னரசு இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

அமைச்சர் ரி.மகேஸ்வரன் தமிழக முதலமைச்சரை இலங்கை வருமாறு அழைத்திருப்பது தெரிந்ததே.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் இலங்கை வருகையை இ.தி.மு.க. தலைவர் என்ற முறையில் எதிர்ப்பதாகவும் தென்னரசு தெரிவித்திருக்கிறார். (ஐ)

### சமாதான முயற்சிகளை விளக்க

## ஐரோப்பியத் தலைவர்களை சந்தித்துப் பேசுவார் பிரதமர்

கொழும்பு,மே13

தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து விளக்கம் அளிக்கும் நோக்குடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இம்மாத இறுதியில் விஜயம் மேற்கொள்ளவிருக்கின்றார்.

லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் றொனி பிளயரையும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் றொமானோ போடியையும் பிரதமர் ரணில் சந்திக்கவிருக்கின்றார்.

கொழும்பு திரும்பிய பின்னர் அடுத்த மாதம் 12ஆம் திகதி இந்தியாவுக்கு பிரதமர் செல்வார். அங்கு இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு நடத்தவிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் பிரிட்டன், இந்தியா, ஐரோப்பிய ஒன்றி

(10ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்தறிந்த பிறகே இடைக்கால நிர்வாக சபை!

## அமைச்சர் லொக்கு பண்டார இப்படிக் கூறுகின்றார்

கொழும்பு,மே13

**கருத்துக்கணிப்புமூலம் மக்களின் ஆணை பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே வடக்கு - கிழக்குப் பிரதேசத்துக்கான இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படும்.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார.**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அடுத்த ஜூன் மாதத்தில் நடைபெறவிருக்கும் உத்தேச நேரடிப் பேச்சுக்களின்போது வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடயமே முக்கியமாக இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் அரசாங்க அமைச்சர் ஒருவர் மேற்கண்டவாறு

(10ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



...உதுக்கெல்லாம் சேர்த்துத் தான் தேர்தலிலை மக்கள் ஆணை வழங்கினவை இப்ப என்ன இருந்தாப்போல உவர் பண்டார புதுக் கதை விடுகிறார்.

### கடந்த ஆட்சிக்காலத்தில் நடந்த

## ஆயுதக் கொள்வனவு ஊழல்; முழு விசாரணைக்கு உத்தரவு!

கொழும்பு,மே13

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பாக விரிவான விசாரணை ஒன்றை நடத்தும்படி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆட்சிக்கால ஆயுதக் கொள்வனவுகளில் பரவலாக மோசடிகள், ஊழல்கள் இடம்பெற்றதாக வெளிவரும் தகவல்களை அடுத்தே இந்த உத்தரவை அவர் விடுத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுக்கும் முப்படைகளின் தளபதிகளுக்கும் இந்த உத்தரவை விடுத்துள்ள அமைச்சர் மாரப்பன, விசாரணை நடத்தி விரிவான அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டுள்ளார்.

அறிக்கையை அடிப்படையாக வைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தனித்தனி விசாரணைகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஐ-3-9)

## 35 மீனவர்களை ஆழ்கடலில் குதிக்கச்செய்த கடற்படையினர்

### திருமலையில் மற்றோர் அடாவடித்தனம்

திருகோணமலை,மே13

திருகோணமலையில் கரையோர மற்றும் கடற்பகுதியில் கடற்படையினரின் அடாவடித்தனம் தொடர்ந்து வருகிறது. கடந்த 9ஆம் திகதி திருகோணமலையில் இருந்து மீன்பிடிக்கச் சென்றவர்கள் தொடர்பாக கடற்படையினர் நடந்து கொண்ட விதம் மனிதாபிமானமற்றதொன்றாகும்.

அச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

திருகோணமலை, திருக்கடலூர், 10ஆம் குறிச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்க முல்லைத்தீவு கடற்பரப்பை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். 7 ரோலர் படகுகளில் சென்ற 35இற்கு மேற்பட்ட மீனவர்களை காலை 10.30 மணியளவில் வழிமறித்த கடற்படையினர் தகாத வார்த்தைகள் பேசி, அடித்து, துன்புறுத்தி கடலில் பாயச் சொல்லியிருக்கிறார்கள். முல்லைத்தீவுக்கு 15கி.மீ. தூரத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. மீனவர்களில் வயதுபோனவர்களும் இருந்துள்ளனர். இவர்களைக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள், படையினரின் படகுகளில் கண்காணிப்பாளர்களும் செல்வர்

கொழும்பு,மே13

கடற்படையினரதும் விடுதலைப் புலிகளினதும் கடற்போக்குவரத்துக்களின்போது அவர்களின் வள்ளங்களில் கண்காணிப்பாளர்களும் உடன் செல்ல ஏற்பாடு செய்யப்படும்.

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் உப-தலைவர் ஹக்ரப் கௌச்லண்ட் இவ்வாறு தெரிவிததுள்ளார்.

இந்த நடைமுறை இம்மாத இறுதியில் இருந்து அமுலுக்கு வரும். இதற்காக மேலும் 26 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இலங்கை வரவிருக்கின்றனர் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் மட்டக்களப்பு வாகரைக் கடற்பகுதியில் படகுகள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குப் பின்னரா இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று அவரிடம் கேட்டபோது -

அந்தச் சம்பவத்துக்கு முன்னரே இந்த நடைமுறை குறித்து முடிவு செய்யப்பட்டிருந்தது - என்று அவர் பதில் அளித்தார். (ஐ-3)

### சமாதானத்துக்கு எதிராக

## ஐந்து கொள்கைப் பிரகடனங்கள் அ'புரத்தில் நாளை வெளியிடப்படும்

கொழும்பு,மே13

சிங்கள எம்.பிக்கள் அமைப்பின் ஐந்து பெரும் கொள்கைகள் தொடர்பாக நாளை 14ஆம் திகதி பிரகடனம் ஒன்று வெளியிடப்படும்.

அநுராதபுரம் ஸ்ரீமகாபோதி அருகே நாளை இடம்பெறவுள்ள பூஜையின் பின்னர் இந்தப் பிரகடனம் வெளியிடப்படும் என்று அந்த அமைப்பின் அழைப்பாளரான மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கில் வாழ்ந்த சிங்களவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், அவர்களை மீண்டும் குடியேற்றுதல், தாயகக் கோட்பாட்டை நிராகரித்தல், புலிகள் இயக்கத் தடையை நீக்காதிருத்தல், இடைக்கால நிர்வாகத்தைப் புலிகள் இயக்கத்துக்கு வழங்காதிருத்தல் ஆகிய வற்றையே சிங்கள எம்.பிக்கள் அமைப்பு ஐந்து பெரும் கொள்கைகளாகக் கொண்டிருக்கும்.

'நாட்டைப் பாதுகாப்போம்' என்ற கருத்தை முன்வைத்து விசேட பூஜை

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கைதிகள் 3 கட்டங்களாக விடுவிக்கப்படுவர்

கொழும்பு,மே13

தடுப்புக்காவலில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை மூன்று கட்டங்களில் விடுவிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்து வருவதாக சமூக-அபிவிருத்தி அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சந்திரசேகரனும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றக் கட்டடத்தில் சந்தித்துப் பேசிய பின்னர் அமைச்சர் சந்திரசேகரன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.(ஐ-9)

## அம்பாறை மாவட்டத்தில் இதுவரை ஒரேயொரு யுத்த நிறுத்த மீறலே!

கொழும்பு,மே13

அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு 53 முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளன. ஆனால் ஒன்று மட்டுமே மீறல் சம்பவம் என்று கண்காணிப்புக்குழுத் தலைவர் ஏர்க்கி பிளற்றன் (பின்லாந்து) தெரிவித்தார்.

இந்த 53 முறைப்பாடுகளில் 26 முறைப்பாடுகள் உடன்படிக்கைக்கு முன்னர் இடம்பெற்றவை. அம்பாறை மாவட்டத்திற்கு வெளியில் இடம்பெற்றவை, யுத்தநிறுத்த மீறலுக்கான ஆதாரம் இல்லாதவை போன்ற காரணங்களுக்காக ஏற்கனவே நிராகரிக்கப்பட்டன.


ஏனைய 27 முறைப்பாடுகள் குறித்தும் கண்காணிப்புக் குழு உபதலைவர் உலா கிறிஸ்டீன் ஹெக்வே (நோர்வே), புலிகள் பிரதிநிதிகளான ஆர்.சண்முகநாதன், ஏ.சௌந்தரநாயகம் அரச பிரதிநிதிகளான ஏ.ஆர்.ஏ. அஸீஸ், மெல்வின் விஜயசேகர ஆகியோர் நேரடியாகச் சென்று விசாரித்தனர்.

26 முறைப்பாடுகள் புரிந்துணர்வுடன் தீர்த்து வைக்கப்படவுள்ளன. ஒரேயொரு சம்பவம் யுத்த மீறலாக இனங்காணப்பட்டுள்ளது என்று தலைவர் கூறினார். (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஜனாதிபதியின் அதிகாரத்தில் கை வைத்தால் அது ஆபத்து!

## எச்சரிக்கிறார் அனுரா



கொழும்பு,மே13

அரசாங்கம் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கக் கூடாது. குறைக்க முயன்றால் சமாதான முயற்சிகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு கிடைக்காது என்று கம்பஹா மாவட்ட எம்.பியும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தம்பியுமான அனுரா பண்டாரநாயக்கா எச்சரிக்கை விடுத்தார். கண்டி போகம்பறை மைதானத்தில் நாட்டுப் பிரிவினைக்கு எதிரான அமைப்பின் ஆதரவில் வண.கலவெலகொடகந்த லோக தேரரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அனுரா மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த பலரும் ஒரு காலத்தில் ஜனாதிபதியைக் கிழிகிழி என்று கிழித்து வந்த அனுராவுக்கு இப்போது நாட்டு நலனைவிட அக்காவின் அதிகாரங்களே பெரிதாகிவிட்டன. இரத்த பாசம் வென்று விட்டது என்று பேசிக் கொண்டனர் [partly illegible: "வென்று விட்டது ... விட்டுக் கூறினர்."]

ஜனாதிபதிதான் நாட்டின் தலைவி; அவர்தான் அமைச்சரவையின் தலைவி; முப்படைகளின் தலைவியும் அவரேதான். அரசமைப்பின் மூலம் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையே அவர் அனுபவித்து வருகிறார். அந்த அதிகாரங்களைக் குறைக்க முயல்வது சட்டவிரோதச் செயல் என்றார் அனுரா பண்டாரநாயக்கா.

அனுரா பண்டாரநாயக்கா கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில் - ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பை 50சத வீதம் குறைக்க உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க உத்தேசித்துள்ளார். அவர் அதைச் செய்வாரேயானால் மக்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டு அவருடைய வீட்டைச் சுற்றிவளைத்துக் கொள்வார்கள். அவரால் வீட்டுக்குள் இருக்க முடியாதுபோகும்.

ஜனாதிபதியின் கணவர் விஜய குமாரதுங்கவைக் கொலை செய்த ஜே.வி.பியுடன் ஒன்று சேர்ந்திருக்கிறேன் என்று குறை கூறுகிறார்கள். ஆனால், விஜய குமாரதுங்க படுகொலை பற்றி விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட கமிஷன் ஜே.வி.பி. தான் படுகொலைக்குக் காரணம் என்று தனது அறிக்கையில் எந்த இடத்திலும் கூறவில்லை.

ரணில் விக்கிரமசிங்கதான் ஜனாதிபதி பிரேமதாஸ, காமினி திஸாநாயக்கா, லலித் அத்துலத்முதலி, ரஞ்சன் விஜேரத்ன உட்படப் பலரைக் கொன்ற புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளார்.

சமாதான முயற்சி தோற்றால் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன. சண்டை நடந்தால் அமெரிக்கா தனக்கு உதவும் என்று அரசு நம்புகிறது. தான் நேரடியாகப் பாதிக்கப்பட்டாலன்றி வேறு நாடுகளுக்காக அமெரிக்கா சண்டையில் குதிக்காது. இப்படி அவர் கூறினார்.

நோர்வே அனுசரணையாளர்கள் புலிகளுக்குச் சாதகமாக நடந்து கொள்கிறார்கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (ஐ)

## மடவள படுகொலை வழக்கு விசாரணை

கொழும்பு,மே13

கண்டி - மடவள பகுதியில் கடந்த பொதுத்தேர்தல் தினத்தன்று பத்து முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்த வழக்கு விசாரணை இன்று திங்கட்கிழமை தெல்தெனிய நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

இவ்வழக்குத் தொடர்பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, அவரது இரு புதல்வர்கள் உட்பட 39பேர் இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட உள்ளனர். (ஐ-9)

## தொழிலாளி காயம்!

லொறியில் இருந்து பொருளகளை இறக்கிக் கொண்டிருந்தவேளை அருகில் வந்த வானுடன் விபத்துக்குள்ளாகி தொழிலாளி ஒருவர் தலையிலும் உதட்டிலும் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, வின்சர் தியேட்டர் சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் நல்லூர் முடமாவடியைச் சேர்ந்த சேனாதிராசா ஸ்ரீமுருகதாஸ் (35) என்ற தொழிலாளியே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-15)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தினால் டாக்டர் அமரர் சிவகுரு ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்திற்காக நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பி.ப 3.30 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆வதிரி டைமன்ஸ் வி.க.எதிர் நாவாந்துறை கலைவாணி வி.க.

☆யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வி.க எதிர் யாழ்ப்பாணம் சென்.அன்ரனீஸ் வி.க (ஐ.86)

### மரணமாகி 15தினங்கள் கடந்து விட்டன

## தேடுவாரற்ற நிலையில் வயோதிபரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில்!

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட வயோதிபர் ஒருவர் 44 தினங்களின் பின் கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி அங்கு மரணமானார்.

மரணமாகி இன்றுடன் 15தினங்களாகியும் இச்சடலம் உரிமை கோரப்படாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையிலேயே உறவினர் வருகைக்காக பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. நீர்வேலியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை சிவசம்பு (வயது 68) என்பவரே உயிரிழந்தவராவார்.

தேடுவாரற்றுக் கிடக்கும் இவரது சடலத்தை உறவினர்கள் வந்து பெற்றுக்கொள்ளுமாறு போதனா வைத்தியசாலை நிர்வாகத்தால் கோரப்பட்டுள்ளது. நோயாளரை அனுமதித்தபோது வழங்கப்பட்ட பாதுகாவலர் விலாசத்துக்கு நிர்வாகத்தால் கடிதம் அனுப்பப்பட்டும் எந்தவித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் ஆஸ்பத்திரி நிர்வாகம் அறிவித்துள்ளது. (க-15)

## சுதேச மருத்துவ முறையில் நுளம்பு ஒழிக்கும் திட்டம்

### அட்டாளைச்சேனையில் ஆரம்பம்

அட்டாளைச்சேனை,மே13

வடக்கு - கிழக்கில் முதல் முறையாக சுதேச மருத்துவ முறையில் நுளம்புகளை ஒழிக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை அட்டாளைச்சேனை பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை அரச ஆயுர்வேத வைத்தியசாலை டாக்டர் கே.எஸ்.எம்.நக்பர் தலைமையில வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக நெடுஞ்சாலைகள், கிழக்குப் போக்குவரத்து அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா கலந்துகொண்டார்.

பிரதேச மக்களுக்கு நுளம்பு ஒழிப்பு மருந்தை அவர் வழங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து சின்னப்பாலமுனை குர் ஆன் மத்தரஸா மண்டபத்திலும் நுளம்பு ஒழிப்பு மருந்தை மக்களுக்கு வழங்கினார்.

வடக்கு - கிழக்கு மாகாண சுதேச வைத்தியத்துறைப் பணிப்பாளர் டாக்டர் திருமதி இ.தர்மராஜா ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்தை இதற்கென அனுப்பி வைத்திருக்கிறார்.

இப்பரீட்சார்த்த திட்டத்தின் அடுத்த கட்டம் அக்கரைப்பற்று, குடியிருப்பு, வாங்காமம் போன்ற பிரதேசங்களில் அமுல்படுத்தப்படும் எனவும், இறுதி நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஆலங்குளம் பிரதேசத்தில் நடைபெறுமெனவும் டாக்டர் கே.எல்.எம்.நக்பர் தெரிவித்தார். (ஐ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில், ஒளி வீச 13 - 07 - 1945

விண்ணில் பிரகாசிக்க 14 - 04 - 2002

### அமரர் செல்லத்துரை பாலேந்திரா

அன்புடன் வாழ்ந்து உலகத்தை விட்டு அகன்றீர்
அயராத சோகத்தில் நாம்வீழ்ந்தே தவிக்கின்றோம்
மாண்புடன் தம்மை நினைவு கூர்ந்து - இங்கு
மனம் ஆறாது அன்னாரின் பிரிவால் சோகமழை பொழிகிறோம்
முப்பொழுதும் எம்மைக்காத்த தெய்வமே அப்பா!
எப்பொழுதும் எம்நெஞ்சில் நீ இருப்பாய்.
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

அன்னாரின் பிரிவால் துயருற்றிருந்த வேளையில் ஆறுதல் கூறி ஒத்துழைப்புகள் வழங்கிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் நாளை (14.05.2002) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கெருடாவில், தொண்டமானாறு.

மனைவி, மக்கள், மருமகன், சகோதரிமார், சகோதரர்கள், மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள். (3721)

### பிரபாவை நாடு கடத்தவேண்டும் என்ற

## ஜெயலலிதாவின் கோரிக்கையை ஆதரித்து பிக்குகள் தீர்மானம்

கொழும்பு,மே13

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கேட்டதன்படி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென தேசிய பிக்குகள் சம்மேளனம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பிக்குகள் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்கின்ற இந்த சம்மேளனம் கடந்த வாரம் நடத்திய கூட்டத்தில் இத்தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சரின் கோரிக்கை மிகச் சரியானது என்றும் -

இந்தியாவின் முன்னாள் பிரதமரை படுகொலை செய்த விடுதலைப் புலிகளின் தலைவருக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும் எனறும் -

இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழக முதலமைச்சரின் கோரிக்கை குறித்து பிரதமரோடு பிக்குகள் சம்மேளனம் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது. (ஐ-9)

## இறைச்சிக்காக மாடுகள் வன்னியிலிருந்து வருகின்றன

கடந்த சில தினங்களாக வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து குடாநாட்டுக்கு பெரும் எண்ணிக்கையான மாடுகள் கொண்டுவரப்படுகின்றன.

யாழ். - கண்டி வீதி பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டதைத் தொடர்ந்து குடாநாட்டில் இருந்து வன்னிப் பகுதிக்கு செல்லும் மாட்டு வியாபாரிகள் அங்கிருநது இறைச்சிக்காக மாடுகளை இங்கு கொண்டுவருவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதனால் வன்னியில் மாடுகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. அங்கிருந்து மாடுகளைக் கொண்டுவரும் வியாபாரிகளில் பலர் கால்நடையாகவே அவற்றைக் கொண்டுவருகின்றனர்.

இவ்வாறு குடாநாட்டுக்கு கொண்டுவரப்படும் மாடுகளில் பெரும்பாலானவை காளை மாடுகளாகவே காணப்படுகின்றன. சிலர் வீடுகளில் வளர்ப்பதற்காகப் பசு மாடுகளையும் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை -

திருடப்பட்ட கால்நடைகள் குடாநாட்டுக்கு கடத்திச் செல்லப்படுவதைத் தடுப்பதற்காக வன்னியில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் அனுமதி பெற்றே மாடுகளைக் கொண்டுசெல்ல முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## அரியாலையில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,மே13

அரியாலையில் நேற்று இடம்பெற்ற இரு வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

முதல் சம்பவத்தில் வளவொன்றைத் துப்புரவு செய்துகொண்டிருந்தவேளை மிதிவெடியில் சிக்குண்டு ஒருவர் இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்து படுகாயமடைந்தார்.

அரியாலையில் இருந்து இடம்பெயர்ந்து கொக்குவில் கியூடெக் முகாமில் வசிக்கும் செல்வரட்ணம் செல்லத்துரை (வயது 45) என்பவரே இதில் படுகாயமடைந்தவராவார்.

மற்றைய சம்பவத்தில் இனம் தெரியாத வெடிபொருள் ஒன்றை எடுத்துக் குத்திப் பார்த்தபோது அது வெடித்துச் சிதறியதில் இளைஞர் ஒருவர் உடல் முழுவதும் சிதறல்கள் பட்டுப் படுகாயம் அடைந்தார்.

அரியாலையில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் ஸ்ரேசனடியில் வசித்துவரும் மோகன் ராகுலன் (வயது 18) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-15)

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



தோற்றம் 25 ❖ 11 ❖ 1919

மறைவு 13 ❖ 05 ❖ 2000

### அமரர் அந்தோனி வஸ்தியாம்பிள்ளை
(அப்பையா) எழுவைதீவு

*"உத்தானமும் உயிரும் நானே*
*என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்".*
தூயநகை மிளிரும் சோதி மலர் முகமே!
துயரங்கள் நிறையுதையா தூயவர் உம் பிரிவால்
பாவிகள் நாங்கள் பரிதவிக்கின்றோம்
பரிவுடன் எமைத்தேடிப் பாரினில் நீர் வருவீரோ?

அப்பையா எனும் நாமம் அருமையாய் பெற்ற நீங்கள்
எப்பையா எமைவந்து இப்புவியில் பார்த்திடுவீர்?
தப்பையா நீர் வந்து இந்நிலையில் எமைபார்த்தல்
செப்பையா இறைவனிடம் ஏன் இந்த நிலை என்று.

*உம் பிரிவால் துயருறும்:*
மனைவி, மக்கள், மருமக்கள்.
சிறிய மக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர். (3607)

*5ஆம் வட்டாரம்,*
*எழுவைதீவு.*




பலஸ்தீனப் பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய இராணுவம் உடனடியாக விலகவேண்டும் என வலியுறுத்தி ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் தலைநகர் டெல்அவிவில் நேற்றுமுன்தினம் இரவு ஆர்ப்பாட்டம் நடத்தியபோது எடுத்த படம்.

# ஐ.நா. படையின் கட்டுப்பாட்டில் உள்ள சியாராலியோனில் கலவரம் மூண்டது!

பிரீடவுண்,மே13

ஆபிரிக்க நாடான சியாராலியோனில் அரசியல் கட்சிகளிடையே பெரும் வன்முறை மோதல்கள் மூண்டுள்ளன. அந்த மோதல்களைத் தடுப்பதற்கு அங்குள்ள ஐ.நா. அமைதி காக்கும் படையினர் பெரும் முயற்சி எடுத்து வருகின்றனர்.

ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கும் ஜனநாயகப் பாதைக்குத் திரும்ப இணங்கிய முன்னாள் தீவிரவாத இயககமான புரட்சிகர ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்களுக்கும் இடையேயான இந்த மோதல்களில் பலர் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

ஒரு தசாப்த காலமாக நாட்டைச் சீரழித்த உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து அதிபர் பதவிக்கான தேர்தல் வாக்களிப்பு நடக்கவுள்ள நிலையில் இந்த மோதல்கள் வெடித்துள்ளன. வன்முறையில் ஈடுபடுபவர்களைக் கலைப்பதற்கு ஐ.நா. அமைதிப் படையினர் வானை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

சியாராலியோனில் அரசுப் படைகளுக்கு ஆதரவாக பிரிட்டிஷ் இராணுவம் இரண்டு ஆண்டுகளின் முன்னர் அங்கு களமிறங்கியதைத் தொடர்ந்து கிளர்ச்சிக் குழுக்கள் படிப்படியாக ஆயுதங்களைக் கைவிட்டு இறுதியில் தற்போதைய தேர்தலில் பங்கேற்க சம்மதித்துள்ளன.

நாளை நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் அஹமட் டேஜன் ஹபாபா உட்பட 9பேர் போட்டியிடுகின்றனர். ஆனால் போடேவை விடுவித்து அவர் தேர்தலில் போட்டியிட வழி செய்ய வேண்டும் என்று அவரது ஆதரவாளர்கள் கோரி வந்தனர். ஆனால் நாளை வாக்களிப்பு நடைபெறவுள்ள நிலையில் தமது கோரிக்கை ஏற்கப்படாத




கலவரத்தை அடக்கும் முயற்சியில் ஐ.நா. படையினர்

இத்தேர்தலில் முக்கிய தீவிரவாதத் தலைவரான பொடே சங்கோ போட்டியிடமுடியவில்லை. கொலைக் குற்றம் உட்பட பல குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குகளை எதிர்நோக்கியுள்ள அவர் ஐ.நா. அமைதிப்படையால் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தால் ஆத்திரமுற்ற தீவிரவாத ஆதரவாளர்களே வன்முறையில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

ஐ.நா. அமைதி காக்கும் படையின் அதிக எண்ணிக்கையான வீரர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்ட நாடு சியாராலியோன் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பஹாமாஸ் கடலில் படகு கவிழ்ந்து ஹெய்டி அகதிகள் 13பேர் பலி!

வாஷிங்ரன்,மே13

மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான ஹெய்டியில் இருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் நுழைவதற்காகச் சென்று கொண்டிருந்ததாக நம்பப்படும் 13பேர் அவர்கள் பயணித்த படகு கவிழ்ந்ததால் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்.

11 மீற்றர்கள் நீளமான அந்தப் படகில் நூறுக்கும் மேற்பட்டவர்கள் பயணித்ததாகவும் -

பகாமாஸ் நாட்டின் கிரேட் இறைகுவா பகுதி அருகே படகு சென்று கொண்டிருந்த சமயம் அதிக பாரம் காரணமாக படகு நீரில் மூழ்கியதாகவும் -

கூறப்படுகிறது.

இதில் 13பேர் உயிரிழந்தனர். கடலில் தத்தளித்த மற்றவர்களில் 73பேரை அமெரிக்கக் கடலோரக் காவற் படையினர் காப்பாற்றிவிட்டனர். ஆயினும் மேலும் பலர் காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வறுமை, பட்டினி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஹெய்டி மக்கள் அமெரிக்காவுக்கு அகதிகளாகச் சென்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பாகிஸ்தானுக்கான அமெ. தூதர் அச்சம் காரணமாக ராஜினாமா!

இஸ்லாமாபாத்,மே13

பாதுகாப்பின்மையைக் காரணம் காட்டி பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் பதவி விலகியுள்ளார்.

பெண் அதிகாரியான தூதர் வெண்டி சாம்பர்வின் என்பவரே பதவி விலகியவராவார்.

கடந்த ஆண்டு மே மாதம் பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதராக வெண்டி நியமிக்கப்பட்டார். இவருக்கு 15 மற்றும் 13வயதுகளில் இரு மகள்கள் உள்ளனர். அவர்களும் வெண்டியுடன் பாகிஸ்தானிலேயே உள்ளனர். இஸ்லாமியர்களின் ரமழான் நோன்பு காலத்தில் அதனைக் கடைப்பிடித்ததன் மூலம் பாகிஸ்தானிய மக்களிடம் வெண்டி நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

அண்மையில் இஸ்லாமாபாத்தில் தேவாலயம் ஒன்றில் குண்டு வெடித்ததில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் இருவர் பலியானதும் -

கராச்சியில் தற்கொலைத் தாக்குதலில் பிரான்ஸைச் சேர்ந்த 11பேர் உயிரிழந்ததும் -

வெண்டிக்கு அச்சத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.

இதனால் தனக்கும், தனது மகள்களுக்கும் பாகிஸ்தானில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதாகக் கூறி வெண்டி தனது தூதர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஓரிரு வாரங்களில் அமெரிக்கா திரும்பவுள்ள வெண்டியுடன் அமெரிக்கத் தூதரகத்தின் வேறு சில அதிகாரிகளும் நாடு திரும்பவுள்ளதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தானின் எல்லைப் புறத்தில் ஆப்கான் போராளிகளைத் தேடும் பணியில் அமெரிக்கப் படையினர் பாகிஸ்தானிய இராணுவத்துடன் இணைந்து ஈடுபடுவதற்குக் கடும் எதிர்ப்புகள் வெளிக்காட்டப்படும் இந்தத் தருணத்தில், வெண்டியின் பதவி விலகல் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# அமெரிக்காவைக் கலக்கியடித்த 'மாபியா' தலைவர் காலமானார்



ஜோசப் பொனானா

நியூயோர்க்,மே13

அமெரிக்காவைக் கலக்கிய 'மாபியா' கும்பலின் தலைவர் ஜோசப் பொனானா தனது 97ஆவது வயதில் அமெரிக்க மாநிலமான அரிசோனா வில் நேற்றுக் காலமானார்.

சிலிநாட்டில் 1905ஆம் ஆண்டு பிறந்த இவர் 'ஜோ பனானா' என்ற பெயரில் பிரபலமானார். 1964 - 69 காலப்பகுதியில் இவர் 'பனானா யுத்தம்' என்ற பெயரில் தனக்குப் போட்டியாக இருந்த பாதாள உலகக் கும்பல்களை கொன்றழித்தார்.

அதன் பின்னர், அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் இருந்துகொண்டு, சட்டவிரோத நடவடிக்கைகளை நடத்தி வந்தார்.

அமெரிக்க நகரங்களில் உள்ள பிரபல பாதாள உலகக் கும்பல்களுக்கு தலைமைச் சபையாக உள்ள 'த கொமிஷன்' (The Commission) என்று அறியப்பட்ட இரகசியக் குழுவில் செல்வாக்குப்பெற்ற உறுப்பினராகவும் பொனானா விளக்கியதாகக் கூறப்படுகிறது. அமெரிக்காவில் 'சட்டவிரோதிகளின் பிதாமகன்' என்று பெயர் பெற்ற பொனானாவின் மரணத் தைத் தொடர்ந்து, அவரது 'மாபியா' குழுவில் பதவிப் போட்டி தலைதூக்கி பல கொலைச் சம்பவங்கள் இடம்பெறலாம் என்று அஞ்சப்படுகிறது. (ஒ)

# இந்திய ரயில் விபத்தில் 10பேர் உயிரிழந்தனர்!

லக்னோ,மே13

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் நேற்று அதிகாலை பயணிகள் ரயில் தடம்புரண்டதில் 10பேர் உயிரிழந்தனர்; 100பேர் வரை காயமடைந்தனர்.

பீஹார் மாநிலம் பாட்னாவில் இருந்து புதுடில்லிக்குச் சென்று கொண்டிருந்த 'சிரஞ்சீவி' விரைவு ரயிலே, உத்தரப்பிரதேச மாநிலத் தலைநகர் லக்னோவில் இருந்து 200 கிலோமீற்றர்கள் தொலைவில் தடம்புரண்டது.

ரயிலின் 24பெட்டிகளில் 14பெட்டிகள் தடம்புரண்டதாகவும் -

அவற்றில் 4 பெட்டிகள் அருகே இருந்த வரண்ட கால்வாய்க்குள் வீழ்ந்துள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. ஆயினும் விபத்து நடந்த பகுதியில் தண்டவாளத்தின் இணைப்புத் தகடுகள் சில கழற்றப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. ரயில் தடம் புரண்டதுக்கு சதிவேலை காரணமாக இருக்கக் கூடும் என்பதை மறுக்க முடியாது என்று இந்திய ரயில்வே அமைச்சர் நிதிஷ் குமார் தெரிவித்தார்.

உலகின் இரண்டாவது பெரிய ரயில் சேவையைக் கொண்ட இந்தியாவில் வருடத்துக்கு சராசரி 300 ரயில் விபத்துக்கள் இடம்பெறுவதாக கணிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் சுமார் 200 விபத்துகள் பணியாளர்களின் கவலையீனத்தால் நடப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ)

உலக அரங்கில்



தடம்புரண்ட ரயில் பெட்டிகளில் மீட்புப் பணிகள் நடைபெறுகின்றன

# கடமையைச் சரியாகச் செய்த ஆசிரியையின் பதவி பறிப்பு!

## அமெரிக்காவில் சம்பவம்

லொஸ்ஏஞ்சல்ஸ்,மே13

அமெரிக்காவில் கடமையை சரியாகச் செய்ததால் ஆசிரியை ஒருவர் வேலையை இழக்கநேரிட்டுள்ளது. சண்டியாகோ நகர ராஞ்சோ பெர்னாண்டோ கல்லூரியின் துணை அதிபராகப் பதவி வகித்த ரீடா வில்சன் நடன ஆசிரியையாகவும் இருந்தார்.

பாடசாலையில் நடன வகுப்புக்களுக்கு மாணவிகள் உள்ளாடைகள் அணியவேண்டும் என்பது கட்டாயம். நடனமாடும்போது ஆபாசமாக இருப்பதைத் தவிர்க்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால், அமெரிக்காவில் இளம் பெண்கள் மத்தியில் உள்ளாடை அணிவது வெறுப்புக்குரிய விடயமாகிறது. இதனால் நடன வகுப்புகளுக்கு வரும் பல மாணவிகள் உள்ளாடைகள் அணியாமல் வந்தனர்.

அவ்வாறு வருபவர்களைக் கண்டு பிடிக்க ஆசிரியை மாணவிகளைச் சோதனை செய்தார். சக மாணவிகள் முன்னிலையில் இந்தச் சோதனை நடத்தப்பட்டதால் வேதனை அடைந்த மாணவிகள் பெற்றோரிடமும், பாடசாலை நிர்வாகத்திடமும் முறையிட்டனர். இதனையடுத்து ஆசிரியை ரீடாவுக்கு வேலை போய்விட்டது.

தான் கடமையைச் சரியாகச் செய்ததாகக் கூறி ரீடா தற்போது நீதிமன்றத்தை அணுக உள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# அமெரிக்கப் படையினர் மீது பாகிஸ்தானில் தாக்குதல்!

லண்டன்,மே13

பாகிஸ்தானில் அல்கெய்டா மற்றும் தலிபான் போராளிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினர் தங்கியிருப்பதாக நம்பப்படும் பாடசாலைக் கட்டடம் ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் ரொக்கெட் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

ஆப்கான் எல்லை அருகே உள்ள பழங்குடியினரின் சுயாட்சிப் பிரதேசத்தில் அமெரிக்கப் படையினர் மீது ஒரு வாரகாலத்தில் நடத்தப்பட்ட இரண்டாவது ரொக்கெட் தாக்குதல் இதுவாகும்.

வடக்கு வஜிரிஸ்தானின் மிரான்ஷாவில் உள்ள குறிப்பிட்ட பாடசாலையில், 7 அமெரிக்கப் படையினர் உறங்கிக்கொண்டிருந்ததாகவும் -

அதிகாலை 2மணியளவில் ரொக்கெட் குண்டு பாடசாலைக் கட்டடத்தின் ஒருபுறத்தில் வழ்ந்து வெடித்ததாகவும் - கூறப்படுகிறது. இத்தாக்குதலில் எவரும் காயமடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)


# வியட்நாமில் சூதாடிய 21 பெண்கள் கைது!

ஹோசிமின்சிற்றி,மே13

கம்யூனிஸ நாடான வியட்நாமில் பணம் வைத்துச் சூதாடிய 21 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தலைநகர் ஹோசிமின்சிற்றியில் பெண்களின் நலன்களை மேம்படுத்த அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் இயக்கம் ஒன்றின் அலுவலகத்துக்கு அதிக அளவில் பெண்கள் சென்று வந்ததால் சந்தேகப்பட்ட பொலீஸார் அங்கு சோதனையிட்டனர். அப்போது அலுவலகத்தில் பெண்கள் பணம் வைத்துச் சூதாடிக் கொண்டிருந்தனர்.

அவர்களைக் கைது செய்த வியட்நாமியப் பொலீஸார், பத்து சீட்டுக் கட்டுக்களையும், சூதாட்டத்தில் பந்தையப் பணமாக வைக்கப்பட்ட சுமார் 2லட்சம் ரூபா மதிப்புள்ள உள்ளூர் பணமான 12 ஆயிரத்து 300 டொங்குகளையும் கைப்பற்றினர்.

சூதாட்டம் தடைசெய்யப்பட்டுள்ள வியட்நாமில், இந்தப் பெண்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு சில ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். (ஒ)

செல்வி சுதாஜினி பொன்னம்பலத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் முதல் அரங்கேற்ற நிகழ்வாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரங்கேற்ற நாயகி தோன்றும் ஒரு காட்சியை முதலாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (எ-51)

எத்தனையோ அரங்கேற்றங்கள், இசை நிகழ்வுகளைக் கண்ட

# யாழ்நகரம் மீண்டும் பொலிவு பெற்று எமது கலைகளும் செழிப்புற வேண்டும்

## பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,மே13

பரதநாட்டிய அரங்கேற்றங்களுக்கும் இசை நிகழ்வுகளுக்கும் களமாய் அமைந்த யாழ். நகரப்பகுதி மீண்டும் பழைய நிலைக்குக் கட்டியெழுப்பப்படவேண்டும். யாழ்நகரம் மீண்டும் புத்துயிர் பெறும் அதே சமயம் தமிழர்களின் கலைகளும் வளர்ந்து செழிப்புறவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.

நாட்டியக் கலைமணி செல்வி ஆனந்தஜோதி சண்முகநாதனின் மாணவியும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியுமான செல்வி சுதாஜினி பொன்னம்பலத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் அணமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

துணைவேந்தர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கலாசாரப் பின்னணியும், பண்பாட்டுச் சூழலும் கொண்ட யாழ். நகரில் முன்னர் தெப்பக்குளம், மணிக்கூட்டுக் கோபுரம், சுப்பிரமணியம் பூங்கா, பொதுநூலகம், திறந்த வெளி அரங்கு ஆகியவை அமைந்திருந்தன.

பின்னர் போர்ச்சூழல் காரணமாக மேற்படி கட்டடங்கள் அனைத்தும் பலத்த சேதமடைந்துவிட்டன. எனினும் தற்போது சம்பந்தப்பட்ட கட்டடங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே போரினால் சேதமடைந்திருந்த வீரசிங்கம் மண்டபம் திருத்தியமைக்கப்பட்டுப் புதுப்பொலிவுற்று விளங்கும் இன்றைய சமாதான சூழலில், கடந்த இருபது வருடங்களின் பின்னர் இங்கு இடம்பெறும் முதலாவது பரதநாட்டிய அரங்கேற்றமாக இந்த அரங்கேற்றம் அமைந்துள்ளது.

வயதிலும் தோற்றத்திலும், சிறியவரானாலும் பரதக் கலையின் நுட்பங்களை எவ்வளவு கட்சிதமாக உள்வாங்கிக் கொண்டு மேடை நிறைந்த ரசிகர்கள் மத்தியில் துணிச்சலாகத் தான் கற்ற கலையை வெளிப்படுத்திய செல்வி சுதாஜினி பொன்னம்பலத்தின் திறமை அபாரமானது.

இந்தக் கலையை அவருக்குப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் வரன்முறை தவறாது பரதக்கலையின் நுணுக்கம் பிசகாமல் பயிற்றுவித்து அரங்கேற்றிய செயல் பாராட்டப்படவேண்டியது. - என்றார்.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ்.சிறிதயாளன் தனது உரையில்:-

பரதநாட்டியம் தென்னகத்தில் முகிழ்ந்து இன்று தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் புதுமெருகுடன் வளர்ந்து வருகிறது. அபிநயம், பாவம், தாளம் மூன்றும் இணைந்துள்ள இப்புனிதக்கலை தெய்வீகமானது. கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும் எல்லோராலும் ரசிக்கக் கூடிய கலை.

ஈழத்திலே பரதக் கலையின் தந்தை என்று சொல்லக்கூடிய கொக்குவில் ஏரம்பு சுப்பையாவின் வழி வந்த விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசனிடமும் இன்று யாழ். பல்கலைக்கழக நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமை புரியும் கிருஷாந்தி ரவீந்திராவிடமும் முறையாகப் பரதக் கலை பயின்ற கலா வித்தகர் ஆனந்தஜோதி சண்முகநாதன் பல்கலைக்கழகத்தில் முதல் பிரிவில் சித்தியடைந்தவர். அவருடைய முதல் மாணவியாகவும், அவர் நிகழ்த்தும் முதலாவது அரங்கேற்றமாகவும் அமையும் இந்நிகழ்வு சிறப்புடையது என்றார்.

மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி தேவபுஷ்பம் இராசரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் நல்லூர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். (எ-51)

### பொதுக்கூட்டம்

சுழிபுரம்,மே13

பண்ணாகம் மக்கள் சிக்கன கடன் வழங்கும் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (எ-28)

### தாதியர் தினத்தில் இரத்ததானம்

யாழ்ப்பாணம், மே13

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிப் பாடசாலை மாணவத் தாதியர் பலர் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்கினர்.

இத்தினத்தை முன்னிட்டு, யாழ். போதனா வைத்தியசாலை அனைத்துத் தாதிய உத்தியோகத்தர்களும் ஒன்றிணைந்து நேற்று பயிற்சிப் பாடசாலையில் விழா ஒன்றினை நடத்தினர். இவ்வேளை விருந்துபசார நிகழ்வும் இடம்பெற்றது. (க-15)

### சைக்கிள் செயின் வீசிய விஷமிகள் பிடிபட்டனர்

அரியாலை,மே13

நீர்வேலி தெற்குப் பகுதியில் இரவு வேளைகளில் மின்சாரக் கம்பிகள் மீது சைக்கிள் 'செயினை' எறிந்து மின்சாரத்தைத் துண்டித்து வந்த விஷமிகள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

கடந்த புதன்கிழமை சிலர் சைக்கிள் செயினை மின்சாரக் கம்பியில் எறிந்துவிட்டு ஓடிய சமயம் அப்பகுதி இளைஞர்கள் அவர்களைத் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்து எச்சரித்து பின்னர் விடுவித்திருக்கின்றனர். (க-17)

### ஆவரங்காலில் நடந்த கூட்டத்தில் இளம்பரிதி பேச்சு

யாழ்ப்பாணம்,மே13

சமகால அரசியல் நிலை தொடர்பான அரசியல் கருத்தரங்கு நேற்று முன்தினம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

ஓய்வுபெற்ற கிராம அலுவலர் எஸ்.துரைசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் வலி. வடக்கு அகதிகள் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் எஸ்.கந்தையா, வித்தியாலய அதிபர் ஆகியோர் உரையாற்றினர்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி சிறப்புரையாற்றினார். (க-3)

யாழ்.மத்திய கல்லூரியில்

# விடைத்தாள் மதிப்பீடுகள் இரு வாரங்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம்,மே13

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். தொடர்ந்து இரண்டு வாரங்கள் மதிப்பீட்டுப் பணிகள் இடம் பெறும்.

தமிழ்மொழி, இந்துநாகரிகம், பொருளியல், கணக்கியல், புவியியல், அளவையியலும் விஞ்ஞானமும் ஆகிய ஆறு பாடங்களுக்கும் 16 மதிப்பீட்டுக் குழுக்கள் செயற்படவுள்ளன. 2001இற்கும் மேற்பட்ட விடைத்தாள் மதிப்பீட்டு பணியாளர்கள் பணியில் ஈடுபடவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் முதற்றடவையாக நடைபெறவிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியை உதவிப் பரீட்சை ஆணையாளர் ஏ.சிவலிங்கம் நேரடியாக வருகைதந்து ஒழுங்கமைப்புச் செய்துள்ளார். (க-11)

# வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்கு பாவனைப் பொருள்கள் அன்பளிப்பு

## ஓய்வூதியர் சங்கம் வழங்கியது

வல்வெட்டித்துறை,மே13

வல்வெட்டித்துறை ஓய்வூதியர் சங்கத்தினர் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு ரூபா 50 ஆயிரம் பெறுமதியான பாவனைப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

ஐம்பது பிளாஸ்ரிக் சாய்வுக் கதிரைகள், இரண்டு கூரை மின்விசிறிகள் போன்றவை அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (எ-ரி)

### குறைந்து வரும் திருட்டுக்கள்

கொக்குவில்,மே13

கொக்குவில், தாவடிப் பகுதிகளில் திருட்டு நடவடிக்கைகள் கடந்த இரண்டு மாதங்களாக குறைவடைந்துள்ளன. என்று கூறப்படுகிறது. (க-13-ரி)

### தையல் பயிற்சி வகுப்புக்கள்

மல்லாகம்,மே13

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆதரவுடன் மல்லாகம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத்தில் இவ்வாண்டிற்கான தையல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சியில் பங்குகொள்ள விரும்புவோர் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக மேற்படி சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-12-ரி)

### புனரமைப்பு

அரியால்லை,மே13

முற்றவெளியில் அமைந்திருக்கும் யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் சேதமடைந்திருந்த மண்எண்ணெய் நிலத்தடித் தாங்கி புனரமைக்கப்பட்டுள்ளது.

தாங்கி புனரமைக்கப்பட்டதை அடுத்து பாவனையாளர்களுக்கான மண்எண்ணெய் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (க-17)


தேவை

பிஸ்கற் தயாரிப்பதற்கான அச்சுகள் இருப்பின் உடன் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**வேல் மிக்சர்,**
*960, K.K.S. வீதி,*
*நாச்சிமார் கோயிலடி.* (3704)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 22 - 05 - 1960



இறைவன் அடியில் 13 - 04 - 2002

## அமரர் வைத்திலிங்கம் சந்திரகுமார்

**திதி: 13-05-2002**

*முழுதாய் மலர்ந்த ரோஜாப் பூவைத் திடீரென பறித்தது போல்*
*சென்று விட்டீர்! -*
*எவ்வித பிரியாவிடையோ, விடைபேறுகளோ இல்லாமல்.*
*ஆனால் எங்களுடைய வீட்டில் நீர் என்னுடனேயே இருக்கின்றீர்*
*உங்களுடைய குரலும் சிரிப்பும்*
*என்னுடைய இதயத்தில் எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது.*
*உம்முடைய கனவுகள் நனவாகவே இல்லை*
*கடவுள் ஏனோ கருணை காட்டவில்லை.*
*நீர் என்னை தனியே தவிக்கவிட்டு - மேலுலகம் சென்றுவிட்டீர்!*
*எங்களுடைய வீடு கண்ணீரும், துக்கமும் நிறைந்த*
*சமுத்திரமாக உள்ளது.*
*உங்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*"அருணோதயம்",*
*தேவாலய வீதி, மூளாய்.* (3705)

என்றும் உம் பிரிவால் துயருறும்:
**மனைவி.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி றெஜினா அரியமலர் ஸ்ரீபன்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அரியமலர் (09.05.2002) வியாழனன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மண்டலநாயகம் தம்பதிகளின் அன்பு மகளும் ஸ்ரீபனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற A.T.S.K. சிங்கம் மற்றும் இராசமலர் (இளைப்பாறிய ஆசிரியை, மானிப்பாய் இந்துக்கல்லூரி), காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் செல்வராணி (கனடா), குமாரகுலசிங்கம், ஜெயமலர் (கனடா), ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அதிசயமலர், ஜெனநாயகம், கண்மலர், காலஞ்சென்ற செல்வநாயகம், மற்றும் இராணிமலர், அற்புதராணி ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*C.P.Stephens,*
*1030 Palaiyoothu,*
*Trinco. T.P.No 026 - 20624.*

*தகவல்:-*
ம.சிவந்தா (மருமகள்)
மானிப்பாய்.*T.P.No: 021- 2882* (3699)

## சரவணமுத்து மாணிக்கம்

சரசாலையைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை, மீனாட்சி அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து மாணிக்கம் நேற்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அவரது இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2002) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பொற்புலவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா.சரஸ்வதி (மனைவி),
பிள்ளைகள்.

*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.* (3706)

# உதயன்

## திட்டங்கள் வகுத்து செயற்படவேண்டிய தருணம்

தற்போது முன்னெடுக்கப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகளுக்கு எதிராக வழமைபோல் தென்னிலங்கையில் இனவாதக் கூச்சல் கிளம்பியிருக்கின்றது.

ஈழத்தமிழர் தாயகம் வடக்கும் கிழக்கும். அதில் கணிசமான பகுதி புலிகள் வசம் உள்ளது. எஞ்சிய பிரதேசம் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில். அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் தான் பொதுத் தேர்தல் நடைபெற்றது. ஈழத்தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் புலிகளே என்ற கோரிக்கையை முன்வைத்தவர்களையே ஈழத்தமிழர் இந்தப் பொதுத்தேர்தலில் தெரிவு செய்தனர். அதாவது புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும் புலிகளே தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை ஒரேயடியாக அங்கீகரித்தார்கள். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நின்ற டக்ளஸின் ஈ.பி.டி.பியும் வரதராஜப்பெருமாளின் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் மண்கவ்வின. அதேபோல சிங்கள மக்கள் மத்தியில் சமாதான முயற்சிகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்த சிஹல உறுமய, சிங்கள மகாஜன, பூமிபுத்ர போன்ற கட்சிகளை சிங்கள மக்கள் நிராகரித்தனர். ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகளாலும் கணிசமான வெற்றியைக் காணமுடியவில்லை.

சமாதானத்துக்கு எதிராக சங்கநாதம் எழுப்பி, போர்ப்பிரகடனம் செய்த ஜனாதிபதி சந்திரிகாவின் அரசையும் சிங்கள மக்கள் மண்கவ்வ வைத்தனர். சமாதானத்துக்காக குரல் எழுப்பிய ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆட்சியை ஒப்படைத்தனர்.

என்றாலும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான இனவாதக் கூச்சல் அடங்கவில்லை. சமாதான முயற்சிகள் முன்னோக்கி நகர நகர இந்தக் கூச்சலும் உச்சஸ்தானம் நோக்கி உயர்ந்துகொண்டிருக்கின்றது. அமைதி முயற்சிகளை இந்த இனவாதக் காட்டுக்கூச்சல் குழப்பிவிடுமா என்ற அச்சம் சமாதானப் பிரியர்களுக்கு.

இந்த இனவாதக் கூச்சல் எழுப்பும் - சமாதானத்துக்கு எதிரான குழுவில் - பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி(நு.ஆ.) ஆகியவையும் இணைந்துகொண்டிருப்பதால் இனவாதக் குழுக்களின் கை ஓங்கியிருக்கின்றது. எனவே அமைதி முயற்சிகளுக்கு எதிரான இத்தகைய நடவடிக்கைகளை ஆட்சேபிக்கும் விதத்தில் வடக்கு - கிழக்கில் எதிர்ப்புக் கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. தமிழர் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் வன்னியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியபோது இவ்வாறு முடிவுசெய்யப்பட்டது.

விடுதலைப் புலிகள் மற்றும் நான்கு கட்சி தமிழ்க் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஆதரவோடு இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவிருக்கின்றன.

இந்தப்போராட்டங்களில் முழுஅளவில் பங்குபற்றுவதன் மூலம் தென்பகுதியில் எழுப்பப்படும் இனவாதக் கூச்சலுக்கு எதிரான எமது ஒட்டுமொத்த ஆட்சேபத்தை சர்வதேச சமூகத்துக்கும் இனவாதிகளுக்கும் ஒரே குரலில் எடுத்துக்காட்ட வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் முன்வரவேண்டும்.

அத்தோடு வடக்கு - கிழக்குக்கு வரும் சிங்கள மக்களுக்கென ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை எடுத்து விளக்கும் வகையிலான தெருக்கூத்துக்களை நடத்தவும் உரைகள் மற்றும் பிரசாரங்களை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. வடக்கு - கிழக்குக்கு வரும் சிங்கள மக்களுக்கு விளக்கும் வகையில் இதனைச் சிங்களத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

இத்தகைய சிங்கள மொழி மூலமான தெருக்கூத்துக்களையும் பிரசாரங்கள் மற்றும் பிரசுரங்களையும் வடக்கு - கிழக்குக்கு வரும் சிங்களவர்களுக்கு என்று மட்டும் மட்டுப்படுத்தாமல் வடக்கு - கிழக்குக்கு வெளியே உள்ள தென்பகுதிச் சிங்களவர்களுக்கும் நமது நிலையை விளக்கத்தக்க வகையில் தென்னிலங்கையிலும் நடத்த வேண்டும்.

அத்தகைய பணியைச் செய்வதில் சில ஆபத்துக்கள், இடையூறுகள் இருக்கக்கூடும் என்றாலும்கூட எமது மக்களின் பக்கத்துக் கருத்துக்களை உரிய முறையில் சிங்கள மக்களுக்கு எடுத்துரைப்பதும் அதை அவர்கள் செவிமடுப்பதும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் அவசரமான, அவசியமான பணி ஆகும்.

ஏற்கனவே புலிகளின் குரல் வானொலி தனது சேவையை சிங்கள மொழிக்கு விஸ்தரித்திருக்கின்றது. என்றாலும் அந்நிகழ்ச்சி வவுனியாவுக்கு அப்பால் ஒலிபரப்பப்படுவதில் சிக்கல் இருப்பது உண்மையாகும்.

எனவே அமைதி முயற்சியை சிங்களத் தீவிரவாதிகள் குழப்புவதற்கு எதிராக நாம் கிளர்ந்தெழமுன்னர், சிங்கள மக்கள் தவறாக வழிநடத்தப்படுவதில் இருந்து அவர்களை விடுவிக்கவேண்டிய பணியை செய்யவேண்டியவர்களாகின்றோம் நாம்.

அதற்கு நமது பக்க நியாயங்களை சிங்கள மக்களுக்கு நாம் எடுத்து விளக்குவது அவசியமாகின்றது. அதற்கான உத்திகளை, திட்டங்களை நேர காலத்துடன் வகுத்துக்கொள்வதும் அதற்கேற்ப திட்டமிட்டுச் செயற்படுவதும் நமது தரப்பின் கடமையும் பணியுமாகின்றது. இதனை நாம் ஒழுங்குமுறை தவறாது செய்து முடிப்போமா?

நமது மக்களின் அரசியல் தலைவர்கள் தமக்குத் தாமே கேள்வி எழுப்பித் திட்டம் வகுத்துச் செயற்பட வேண்டிய விடயம் இது. செய்வார்களா?

# எமது கலாசாரமும், பண்பாடும் வன்னியிலேயே மேலோங்கியுள்ளன

## பிரபல ஊடகவியலாளர் தார்ஸீசியஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே13

ஈழத்தமிழர்களின் கலாசாரமும், பண்பாடும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிப் பகுதியிலேயே மேலோங்கி உள்ளன.

பிரபல ஊடகவியலாளர் ஏ.சீ.தார்ஸீசியஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி. தமிழோசை மற்றும் ஐ.பி.ஸி. வானொலி சேவைகளில் பணியாற்றியவரும், பிரபல நாடக நடிகரும், நெறியாளருமான இவர் 23 ஆண்டுகளின் பின்னர் தற்போது தாயகம் வந்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.சீ.தார்ஸீசியஸ். 'உதயன்' செய்தியாளருடன் பேசியபோதே மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் வெளிநாட்டிற்கு உயிரைக் காத்துக்கொள்ள ஓடிய கோழைகள். ஆனாலும் அங்கே இருந்து எமது நாட்டின் நிகழ்வுகளை அறிந்த வண்ணமே உள்ளோம். அதிலும் எனக்கு செய்தி ஊடகங்களுடனான தொடர்புகள் கூடுதலாக இருந்தமையால் அனைத்தையும் விரைவிலேயே அறியக்கூடியதாக இருந்தது.

இலங்கைச் செய்திகளை நாம் இணையத்தளம் மூலமாக அறிய முற்படும்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை அதற்கு காத்திரமான பங்களிப்பைச் செய்தது. அதேபோல மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் பத்திரிகையின் பங்கும் குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலத்துடன் ஒப்பிடும்போது பத்திரிகை தாங்கிவரும் செய்திகள் நடப்பு விடயங்களைத் தெரியப்படுத்துவதில் பெரும்பங்கு கொண்டவை. எனினும் நான் இங்கு வந்து பார்வையிட்டபோது வெளிவராத தகவல்களும் ஏராளம் உள்ளதை அறியக்கூடியதாக உள்ளது.

கடந்த சில நாள்களாக வன்னியில் தங்கியிருந்தேன். கட்டைக்காடு தொடக்கம் மணலாறு உட்பட்ட பல பிரதேசங்களையும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல இடங்களையும் சென்று பார்த்தேன்.

போராட்டம் பற்றியும், தற்போது நிலவும் அமைதிச் சூழ்நிலையில் மண்மீட்பு சமரில் மாண்ட மாவீரர்களது பெற்றோர், உறவினர்கள் மற்றும் போராளிகளின் உறவுகளைச் சந்தித்தேன்.

"எம் பிள்ளைகள் எந்தநோக்கத்துக்காக உயிரைக் கொடுத்தார்களோ அந்த நோக்கம் நிறைவேறுவதிலேயே எமது திருப்தி உள்ளது. சுதந்திரமான வாழ்க்கைக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்களை நினைத்துப் பெருமையடைகின்றோம். நாம் வறுமையால் வாடுகின்றோம். எனது பிள்ளை இருந்தால் வறுமை நிலை மாறியிருக்கலாம். ஆனால், போராடப் போனவன் பிள்ளை. அவனை நான் அனுப்பவில்லை. தானாகத்தான் போனான். அப்படியிருக்கும்போது அவர்களிடம் உதவி கேட்க எனக்கு என்ன உரிமையிருக்கிறது? என்று மிகவும் ஆணித்தரமாகக் கூறினார்கள் மாவீரர்களின் பெற்றோர்கள்.

இந்த அனுபவம் என்னைப் பெருமிதம் கொள்ள வைத்தது. இத்தகைய பெருமைமிக்கவர்களைச் சந்தித்ததில் உண்மையிலேயே நான் மிகவும் பெருமையடைந்தேன்.

கிளிநொச்சிக்கு நான் சென்றபோது அங்கே இயங்கிவந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணி என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது. உண்மையிலேயே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியைப் பற்றி வெளிநாடுகளில் அறிந்து வைத்திருப்பது மிகவும் சொற்பமே.

'ஜெயசிகுறு' நடவடிக்கையின்போது இராணுவத்தினரால் பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். இப்பெண்கள் வாழ்க்கைத் துணைவர்களாலும், பிள்ளைகளாலும் ஒதுக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள்.

இத்தகைய நிலையில் உள்ள 64 பெண்களைச் சந்தித்தேன். அவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குப் போதிய நோய் மாற்று நடவடிக்கைகளுக்கான வசதிகள் இல்லை. எனினும் அவர்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகமே பராமரித்து வருகிறது.

அதுமட்டுமன்றி சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்குச் சென்றேன். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடத்தப்படும் இல்லம், காந்தரூபன் அறிவுச்சோலை, செஞ்சோலை போன்றவற்றிலுள்ள சிறார்களைப் பார்த்தபோது வியந்துபோனேன்.

ஏனெனில் முன்பு நான் கண்ட சிறுவர் பராமரிப்பு இல்லங்களிலுள்ள சிறுவர்களின் கண்களில் ஏக்கம் காணப்படும். ஆனால் இன்று சிறார்களிடம் பொங்குவது மகிழ்ச்சி. வெளிநாடுகளில் நானும் வேறு பலரும் சேர்ந்து "மடிப்பிச்சை மன்றாட்டு" என்ற பெயரில் சேகரித்த நிதியை அனுப்பியிருந்தேன்.

எனக்கு இன்றைய வடக்கு சூழ்நிலை உணர்த்தியது யாதெனில் பயங்கரங்களுக்கு மத்தியிலும் மேலோங்கி நிற்கும் மனிதநேயம் ஆகும். எமது கலாசாரம், பண்பாடு வன்னியிலே மிகவும் மேலோங்கிய நிலையில் உள்ளது. யாழ்ப்பாணத்தில் எதையும் சிறப்பாக அவதானிக்க முடியாதபோதும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் யாழ்ப்பாணம் சீரான நிலைக்கு மாறிவருவதாக என்னிடம் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

இங்கே பண்பாடு, மொழி என்பன சிறப்புறு நிலையில் இருக்கும்போது வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் நிலை மிகவும் வேதனைக்குரியது. தென்னிந்தியத் திரைப்படங்களின் ஆக்கிரமிப்பால் உறவுமுறைகள் கூட வெறுப்பேற்றத்தக்க வகையில் பிரயோகிக்கப்படுகின்றன.

ஒரு வீட்டிற்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவ்வீட்டுப் பிள்ளையிடம் "அப்பா எங்கே?" என்று கேட்டால் "அப்பா பொண்டாட்டியுடன் வெளியே போட்டார்" என்று பதில் வருகின்றது. இது தென்னிந்திய சினிமாவின் தாக்கம் என்பதை உணர முடிகிறது. இதனைச் சீர்செய்ய, நாடகங்கள் மூலமாக எமது சமூக விழுமியங்களை வெளிப்படுத்த முனைகின்றோம். ஆனாலும் தென்னிந்தியத் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி சேவைகளின் ஆக்கிரமிப்பு பாரதூரமானதே. - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-13)

### முதலும் கடைசியுமான சந்தர்ப்பம்

# கறுப்புப் பணத்தை எவரும் முதலீடு செய்ய முடியும்

## பிரதி நிதியமைச்சர் அறிவிப்பு

கொழும்பு,மே13

புழக்கத்திலுள்ள கறுப்புப் பணத்தை சட்டபூர்வமானதாக்கி அதனை பொருளாதாரத்தில் பயன்படுத்திக்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. இது தொடர்பாக முன்னைய அரசு மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

- இவ்வாறு பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை பேருவளையில் நடைபெற்ற பகிரங்கக் கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

உள்நாட்டு இறைவரி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் இந்தக் கறுப்புப் பணத்தை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் வரையில் சட்டபூர்வமாக்குவதற்கு வாய்ப்பளிக்கும். எனவே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு கணக்குக் காட்டாமல் வைத்திருக்கும் எந்தத் தொகையையும் எவரும் இப்போது முதலீடு செய்யமுடியும். முதலும் கடைசியுமான இந்தச் சந்தர்ப்பத்தைப் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அரச ஊழியர்களுக்கு சம்பளம், ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியம் ஆகியவற்றை வழங்குவதற்காக அரசு 13ஆயிரத்து 800 கோடி ரூபாவை செலவிட்டு வருகிறது என்றும் பிரதி நிதியமைச்சர் தெரிவித்தார். (க-6-9)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு கண்டி றோட்டறி அன்பளிப்பு

வலி.வடக்கு,மே13

இடம்பெயர்ந்து மானிப்பாய் பிப்பிலி முகாம் மற்றும் சண்டிலிப்பாய் முகாம் ஆகியவற்றில் வாழும் மக்களுக்கு கண்டி றோட்டறிக் கழகத்தினால் உடுபுடைவைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கண்டி றோட்டறிக் கழகத்தின் 61வருட பூர்த்தியை முன்னிட்டு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உடுபுடைவைகளை கண்டி றோட்டறிக் கழகத்தைச் சேர்ந்த றோட்டேரியன் மோகன் இராசையா வழங்கினார்.

யாழ். றோட்டறிக் கழகம் மேற்படி முகாம்களுக்கு உடுபுடைவைகள் வழங்குவதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-86)

### நாளை

சித்திரை 31
செவ்வாய்க்கிழமை
(14.05.2002)
திதி : துதியை
மாலை 5.43 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
பிற்பகல் 5.09 வரை.
சுபநேரம் : 10.23 - 11.53
ராகுகாலம்: 2.53 - 4.23
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ணவேண்டும். அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

### கோண்டாவில் வடக்கில்

# உடைக்கப்பட்ட நூலகக் கட்டடம் மீண்டும் கட்டப்படுவது எப்போது?

வலி.வடக்கு,மே13

நூலகத்திற்கு மாடிக் கட்டடம் கட்டவென பழைய கட்டடம் உடைக்கப்பட்டு ஆறுமாதம் கடந்த நிலையிலும் புதிய கட்டடத்திற்கான எந்த வகையான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கோண்டாவில் வடக்கில் உள்ள நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்திற்கு உட்பட்ட நூலகக் கட்டடமே வேலை செய்யப்படாமல் இருந்து வருகின்றது.

பழைய கட்டடத்தின் கூரை, ஓடுகள், மரங்கள் வேறு இடத்திற்கு அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

பின்தங்கிய பகுதியில் இருந்த நூலகத்தை பழைய கட்டடத்தில் இயங்கவிடாமல் உடைத்தவர்கள், உரிய மாடிக் கட்டடத்தை உடன் கட்ட நடவடிக்கை எடுக்காதிருப்பது ஏன்? என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (க-86)



கோண்டாவில் இந்துமகா வித்தியாலயத்தின் பாவனைக்கென பாடசாலைக்கு அருகில் ஐந்து லட்சம் ரூபா செலவில் நான்கு பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட் டுள்ளது.

மேற்படி காணிக் கொள்வனவுக்கான காசோலையை கோண்டாவில் நலன்புரிச் சங்கத்தின் (லண்டன் கிளை) சார்பில் அதன் பொருளாளர் சிதம்பரநாதன் சிறி, வித்தியாலய அதிபர் செல்வி பா.மார்க்கண்டுவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய முன்னாள் ஆசிரியர் எஸ்.தம்பிராசா, பழைய மாணவர் இ.நடராசா ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)

# நல்லாசிரியர்களை உருவாக்கும் பணியில் மனநிறைவு கண்டவர் வண்ணை சே.சிவராஜா

அமரர் சே.சிவராஜா யாழ்ப்பாணத்து நீராவியடியில் சேனாதிராஜா-கமலாம்பிகை தம்பதிகளுக்கு ஏக புத்திரனாய்ப் பிறந்தார். இந்து அன்னையில் ஆரம்ப நிலையிலிருந்து உயர்வகுப்பு வரை கற்று அன்னையின் இனிய மைந்தர்களுள் ஒருவரானார். பின் உயர் கல்வியை சென்னை சென்று கற்று விஞ்ஞானப் பட்டதாரியானார்.

இவ்வாறு கற்றதன் பயனாய் ஆசிரியப் பணியில் அமர்ந்தார். ஆரம்ப காலம் 1961இல் சம்மாந்துறை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து பின்னர் மட்டக்களப்பில் வேறு இரு பாடசாலைகளிலும் 1969ஆம் ஆண்டு வரை இவர் ஆசிரிய சேவையாற்றினார். யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று வந்ததும் ஸ்ரீ

## நீத்தார் நயப்புரை

இராமகிருஷ்ண மிஷனால் நிர்வகிக்கப்பட்ட வைத்தீஸ்வராக் கல்லூரியில் இணைந்து கல்வி கற்பித்தார். பின்பு செங்குந்த இந்துக் கல்லூரியில் கற்பிக்குங் காலத்தில் விளையாட்டுத்துறை மேற்பார்வையாளர் பொறுப்பையும் செவ்வனே மேற்கொண்டார்.

ஒரு கருவியானது கணனியை, நேரம்பார்க்க வல்ல கடிகாரத்தை, வானொலியை, ஒலிப்பதிவுக் கருவியைக் கொண்டிருக்கும்போது அதன் பெறுமதி அதிகரிக்கின்றது; சிறப்புறுகின்றது. இதுபோலவே ஒரு மானிடன் பல்வகை ஆற்றல்களையும் கொண்டிருக்கும்போது அவன் ஆற்றல் படைத்தவனாக, ஆளுமைமிக்கவனாகப் பரிணமிக்கின்றான். இவ்வாறே வண்ணை சே.சிவராஜாவும் எழுத்தாற்றல், பேச்சாற்றல், மொழி பெயர்க்குமாற்றல் போன்ற இன்ன பிற ஆற்றல்களையும் கொண்டிருந்தார். இவை இவரது தலைமைத்துவப் பண்பை வளர்க்க உதவின.

வண்ணை சே.சிவராஜா என்ற பெயரில் இவரால் எழுதப்பெற்ற சமய, சமூகக் கட்டுரைகள், பாடரீதியான கட்டுரைகள், பரீட்சை ரீதியான கட்டுரைகள், சிறுகதைகள் இவரது பல்திறன்களுக்கும் கட்டியங் கூறுவனவாக அமைந்துள்ளன. ஆங்கிலத்திலே செவ்வனே பேசுகின்ற, எழுதுகின்ற ஆற்றலோடு தமிழில் மொழிபெயர்க்கும் ஆற்றலையும் இவர் வளர்த்துக்கொண்டார். பிரதம பரீட்சகராக இருந்து பரீட்சை தொடர்பான தெள்ளிய அறிவையும் பெற்றுக்கொண்டார். இவை மாணவர்களுக்குக் கற்பிக்கவும், பரீட்சை தொடர்பான கட்டுரைகளை வழங்கவும் துணை செய்தன. கடந்த ஆண்டு சிறுகதைக்கான சாகித்திய மண்டலப் பரிசினை மாகாண மட்டத்திலும், அகில இலங்கை மட்டத்திலும் பெற்றுக்கொண்டமை இவரது ஆற்றலின் முத்தாய்ப்பாய் அமைந்தன. ஒரு கல்வி நிறுவனம், அந்த நிறுவனத்தில் கற்பிக்கும் ஆசிரியர், தான் வாழும் சமூகத்துடன் தன்னை இணைத்துக்கொள்ளல் வேண்டும். அந்த வகையில் சமூகரீதியாகவும் வண்ணை நீராவியடி (நீர்வாவியடி) சனசமூக நிலையத்தின் போஷகராகவும், யாழ்.இலக்கிய வட்டம், யாழ். இலக்கியப் பேரவை ஆகியவற்றின் செயலாளராகவும் கடமையாற்றியதுடன், வண்ணை கோம்பையன் மணல் இந்துமயான நிர்வாக சபையின் முன்னாள் செயலாளராகவும் இவர் கடமையாற்றினார்.

யாழ் இந்துக் கல்லூரியில் ஆரம்பம்முதல் கல்வி பயின்று பின்னர் ஆசிரியராக, பாட இணைப்பாளராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக இருந்து இளைப்பாறினார். இக் காலப்பகுதியில் கல்லூரியின் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர் ஒன்றியப் பொறுப்பாசிரியராகவும், கல்லூரி அபிவிருத்திச் சபைச் செயலாளராகவும், கல்லூரி நூற்றாண்டு விழாச் சபைச் செயலாளராகவும், பழைய மாணவர் சங்க உப தலைவராகவும் பணியாற்றித் தனது வாழ்வின் பெரும் பகுதியைக் கல்லூரியுடன் இணைத்துக் கொண்டார். ★

**பொ.ஞானதேசிகன்**

# மானிப்பாய் வர்த்தக நிறுவன கூரையிலிருந்து குண்டு மீட்பு!

யாழ்ப்பாணம்,மே13

மானிப்பாயில் இயங்கிவரும் வர்த்தக நிறுவனம் ஒன்றின் கூரை முகட்டில் இருந்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட வெடிகுண்டு ஒன்று இராணுவத்தினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

குறித்த நிறுவனத்துக்கு அருகிலுள்ள கடை உரிமையாளர் தனது கடைக்கூரையில் திருத்த வேலை செய்த சமயம் இக்குண்டைக் கண்டதாகவும் -

உடனடியாக அது குறித்து கடை உரிமையாளரிடம் தெரிவித்ததை அடுத்து அவர் இது குறித்து அப பகுதி இராணுவத்திடம் முறையிட்டார்.

உடனடியாக அந்த இடத்துக்கு வந்த இராணுவத்தினர் கூரையில் இருந்த வெடிகுண்டை மீட்டு, மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் வைத்து செயலிழக்கச் செய்தனர்.

குண்டை வெடிக்க வைத்தசமயம் அயலில் உள்ள மக்கள் பீதியடைந்த போதிலும், விடயம் தெரிந்ததை அடுத்து நிலைமை வழமைக்குத் திரும்பியது.

(ம-15)

## கூட்டுறவுக் கடை மீது குண்டுத் தாக்குதல்

முள்ளிப்பொத்தானை,மே13

முள்ளிப்பொத்தானை 95ஆம் கட்டையில் உள்ள ஈச்சநகர் என்னும் இடத்தில் அண்மையில் கூட்டுறவு முகவர் கடை ஒன்று வெடிகுண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியது.

நள்ளிரவுக்குப் பின்னர் நடைபெற்ற இச்சம்பவத்தை அடுத்து இருவர் சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கூட்டுறவுக் கடை முழுமையாகச் சேதமடைந்ததால் சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் அழிந்திருக்கின்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதோடு இதுவரை சூத்திரதாரி பிடிபடவில்லை.

## சனசமூக நிலையம் மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம்,மே13

சாவகச்சேரி இத்தியடிப பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள கணேசர் சனசமூகநிலையம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

தென்மராட்சி இடம் பெயர்வை அடுத்து பலத்த சேதமடைந்த மேற்படி சனசமூக நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்ட பின்னர் தற்போது மீண்டும் இயங்கத்தொடங்கியுள்ளது.

(எ-12)

## கட்டடம் இடிந்து விழும் நிலையில்!

சண்டிலிப்பாய்,மே13

கட்டுடை சைவ வித்தியாலயத்தின் வகுப்பறைக் கட்டடம் ஒன்று பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டு இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளது.

90 வருடங்களுக்கு முன்னர் சுண்ணாம்புக்கற்களால் நிறுவப்பட்ட இப் பாடசாலைக் கட்டடத்தின் மற்றொரு பகுதியில் கறையான் புற்றுக்கள் எழுந்துள்ளன.

இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டடத்தை அங்கு பயிலும் மாணவர்களின் நலன் கருதி விரைவில் அகற்றித்தருமாறு வித்தியாலய அதிபர் க.சுப்பிரமணியம் கல்வித்திணைக்கள அதிகாரிகளை கடித மூலம் கேட்டுள்ளார்.

(எ-135)


## பதவி வெற்றிடம்

### சந்தைப்படுத்தும் நிறைவேற்று அதிகாரி

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, பொலநறுவை மற்றும் மன்னார் பிரதேசங்களில் கடமையாற்ற சந்தைப்படுத்தும் நிறைவேற்று அதிகாரிகளுக்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் 22-28 வயதுக்கு உட்பட்ட, சந்தைப்படுத்தும் துறையில் இரண்டு வருட அனுபவம் உள்ளவர்கள், ஆங்கிலமும் தமிழும் நன்றாகப் பேசும் திறன் உள்ளவர்கள் 15ஆம் திகதி வைகாசி மாதம், 99, மானிப்பாய் வீதியில் உள்ள பியஸ் ரேடர்ஸ் காரியாலயத்திற்கு தங்கள் விண்ணப்பங்களுடன் நேரடியாக காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சந்தைப்படுத்தும் துறையில் Diploma உள்ளவர்களுக்கும், வாகனம் செலுத்த அத்தாட்சிப் பத்திரம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**பியஸ் ரேடர்ஸ்**
*ஏக விநியோகஸ்தர்கள்*
**லயன் புறுவரி சிலோன் லிமிடட்,**
*99, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி-22070)

## கடைகள் விற்பனைக்கு

கிளிநொச்சி அரச செயலகத்திற்கு முன்பாக கண்டி வீதியில் ஒரு மாடி கட்டப்பட்ட நிலையில் தொடராகவுள்ள நான்கு கடைகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
திரு.சு.பன்னீர்ச்செல்வன் *(ஆசிரியர், மண்கும்பான்)*
61, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(3688)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவியல், சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

*வேலணை வைத்திய கலாநிதி*
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 2459.

(3694)


# கல்விச்சாலைக் காட்சிகள்



குருநகர் சனசமூக நிலையத்தின் ஆங்கில தின விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவின் முதல்நிகழ்வாக இடம்பெற்ற ஆங்கிலப் பாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களைப் படத்தில் காணலாம். (எ-51)



கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமாரைப் பாடசாலை அதிபர் ஆ.மகேசு மலர்மாலை அணிவித்து வரவேற்பதைப் படத்தில் காணலாம். அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலையின் முன்னாள் அதிபர் செ.தங்கராசா, திருமதி தங்கராசா ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-10-173)



கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் சிறுவர் தின விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவுக்குத் தலைமை வகித்த வித்தியாலய அதிபர் வி.சிவசிதம்பரம் உரைநிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அருகில் இந்து மன்றத் தலைவர் எஸ்.நேசரட்ணம் மற்றும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். (எ-173)




கோப்பாய் கலைவாணி கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழாவும், மலர் வெளியீடும் அண்மையில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அதிபர் எஸ். யோகராசா, ஓட்டுவெளி அ.மி.த.க. பாடசாலை அதிபர் கு.சிவப்பிரகாசம், கல்வி நிலைய இயக்குநர் சி.சிவரூபன் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-10)



ஆரம்ப வகுப்புகளில் கணிதபாடம் கற்பித்தல் தொடர்பான செயலமர்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமானது. அதில் தேசிய கல்வி நிறுவக ஆரம்ப கணிதபாட செயற்றிட்ட அதிபர் எம்.சிப்லி உரையாற்றுவதையும் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:அற்புதன்)

# விளையாட்டுத்துறையில் மிக்க ஆர்வம்; தேசிய மட்டத்துக்கு யாழ். வீரர்களும்!

## அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை என்கிறார் வைத்தியதிலக்க

யாழ்ப்பாணம்,மே13

கடந்த கால யுத்தம் காரணமாக யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை பின் நோக்கிச் சென்றுள்ளது. எனினும் தற்சமயம் சகலரும் விளையாட்டுத்துறையில் ஆர்வங்காட்டுவது பெரு மகிழ்ச்சியளிக்கின்றது. தேசிய மட்டத்துக்கு யாழ்.வீரர்களும் வரும் சூழ்நிலை காணப்படுகின்றது. அந்த நாள் வெகுதூரத்தில் இல்லை.

அமெச்சூர் மெய்வன்மைச் சங்க பொதுச் செயலாளர் பி.எச்.டி.வைத்திய திலக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு வந்துள்ள வைத்தியதிலக்க 'உதயன்' நிறுவனத்துக்கு வருகை தந்தார். அச்சமயமே அவர் இக் கருத்தை வெளியிட்டார். மெய்வன்மைச் சட்டவிதிகள் தொடர்பாக தகுதி வாய்ந்த தொழில்நுட்ப அதிகாரியாக விளங்கும் இவர், ஆசிய நாடுகளில் தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு பயிற்



சிகளை வழங்கிவருகிறார். இவர் 83ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் வீரர்கள், வீராங்கனைகள் தேசிய, சர்வதேச மட்டங்களில் புகழ்பரப்பியிருந்தனர்.

கடந்த கால யுத்தநிலை காரணமாக விளையாட்டுத்துறை பின்நோக்கிச் சென்றுள்ளது. இன்று இத்துறை புத்துணர்வு பெறுவதைக் காணமுடிகின்றது. விரைவில் தேசிய மட்டத்துக்கு யாழ்.வீரர்கள் வருவார்கள்.

97ஆம் ஆண்டு அமெச்சூர் சங்கத் தலைவராகப் பதவி வகித்த போது தொழில்நுட்ப அதிகாரிகள் தமிழில் பரீட்சைக்குத் தோற்ற ஏற்பாடு செய்தேன். யாழ்ப்பாணத்தில் பரீட்சை நிலையம் அமைத்து பரீட்சையை நடத்தினேன். இதனால் பெரும் எண்ணிக்கையான தொழில்நுட்ப அதிகாரிகள் உருவாகியுள்ளனர்.

ஓகஸ்டில் கொழும்பில் இடம்பெறவுள்ள ஏஸியன் தடகளப் போட்டிகளில் பணிபுரிய யாழ்ப்பாணத்தில் இருந்து ஐந்து தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு இடம்வழங்கவிருக்கின்றோம். ஏனைய மாவட்டங்களுக்கு இருவருக்கே இடமளிக்கப்படும்.

யாழ்.மாவட்டத்தின் விளையாட்டு அபிவிருத்திக்குத் தேவையான உற்பத்திகளைக் கோரலாம். உதவுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். - என்றார் அவர்

இன்று நாட்டில் உருவாகியுள்ள சமாதான சூழ்நிலை தொடரவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். தற்சமயம் சுதந்திரமாக மக்கள் நடமாடக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. சகல பிரதேச மக்களும் நண்பர்களாகப் பழகமுடிகின்றது. நாட்டில் சமாதானம் ஏற்பட இந்நிலை தொடரவேண்டும் என்பதே சகலரதும் விருப்புமாகும். - என்று அவர் கூறினார். (க-3)



முற்றவெளியில் அமைந்திருக்கும் யாழ்.பலநோக்குக் கூ.சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெற்றோல் விநியோகம் கடந்த 6ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் உபதலைவர் பெஞ்சமின் ஜேக்கப் பெற்றோல் விநியோகித்து சேவையை ஆரம்பித்து வைக்கிறார். அருகில் சங்கப் பணியாளர்கள் உள்ளனர்.

(படம்: அரியாலைச் செய்தியாளர்)

# பளைப் பிரதேச செயலகம் மீண்டும் சொந்த இடத்தில்

தென்மராட்சி,மே13

இடப்பெயர்வின் பின்னர் புலோலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இயங்கிய பளைப் பிரதேச செயலகம் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் பளை - புலோப்பளை வீதியில் உள்ள தனியார் கட்டடமொன்றில் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

பளைப் பிரதேசத்தில் பெருமளவு மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதால் இந்த மக்களுக்கு வைத்திய வசதிகள் வழங்குவதற்காக பளை வைத்தியசாலை மற்றும் பிரசவ விடுதியைத் திறப்பதற்கு நடவடிக்கை மேற கொள்ளுமாறு பளை மக்கள் நலன் காக்கும் கழகத்தினர் யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளரைக் கோரியுள்ளனர். (ம-117)

## கச்சாய் படைமுகாம் அகற்றப்பட்டது

கொடிகாமம்,மே13

கச்சாய் தபால் நிலையம் மற்றும் அதனை அண்டிய வீடுகளில் அமைக்கப்பட்டிருந்த இராணுவமுகாம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இதையடுத்து முகாம் பகுதிக்குச் சென்ற பொதுமக்கள் அங்கிருந்த தளபாடங்கள், முள்ளுக்கம்பிகளை எடுத்துச்சென்றனர். (ம-ரி)

## ஆசிய அபிவிருத்தி வங்கி மேற்கொள்ளும் செயற்றிட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே13

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வடக்கு - கிழக்கு சமூக, மறுபுனைவாக்கம் மற்றும் அபிவிருத்தித் திட்டம் யாழ். மாவட்டத்தில் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கையாகச் சில செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கல்வி, சுகாதாரம், நீர்விநியோகம், வீடமைப்பு மற்றும் விவசாயம் போன்றன இத்திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஒ-10)

## கணக்காளர் நியமனம்

கொக்குவில்,மே13

யாழ். மாவட்டத்தில் உள்ள 7 பிரதேச செயலகங்களுக்கு புதிதாக கணக்காளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இவர்களது நியமனங்கள் அமுலுக்கு வந்துள்ளதாக யாழ். செயலகம் அறிவித்துள்ளது.

நியமனம் பெற்ற கணக்காளர்களின் பெயரும், நியமனம் பெற்றுள்ள பிரதேச செயலகங்களினது விவரமும் வருமாறு:-

ஏ.ஜே.எலிசன் (உடுவில்), சுகந்தினி இராஜேந்திரம் (சங்கானை), வே.கலைச்செல்வன் (ஊர்காவற்றுறை), வே.வேல்நிதி (வேலணை), கலைச்செல்வி இராசலிங்கம் (தெல்லிப்பளை), இ.யோகேந்திரன் (கரவெட்டி), வசந்தமாலா மயில்வாகனம் (சாவகச்சேரி). (எ-8-ரி)

# இரண்டாம் ஆண்டு நினைவினில்



தோற்றம் 1919-11-25 மறைவு 2000-05-13

**அமரர்**

**அந்தோனி வஸ்தியாம்பிள்ளை**

*பேரோடும், புகழோடும்,*
*பெருமையாய் பலர் மதிக்க*
*வாழ்ந்து எம்மை வாழ வைத்த எம்*
*அன்புத் தெய்வமே! ஈராண்டு*
*நிறைவாகும் இந்நாளும் எந்நாளும்*
*நீங்காத அன்புடனே உங்களைச்*
*சிந்தையில் வைத்து வணங்குகிறோம்.*

**இவரது ஆத்மா இளைப்பாற்றிற்காக ஊர்காவற்றுறை, புனித மரியாள் தேவாலயத்தில் இன்று இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

தகவல்:
அமிர்தநாதர் ருக்மணி
(மகள்)
*3ஆம், வட்டாரம், எழுவைதீவு.*

இவரது பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.** (3701)

# இலங்கை வர்த்தக சம்மேளனம்

## மூன்றாவது வர்த்தக குழு யாழ். விஜயம்

## மே 16ஆம், 17ஆம் திகதிகள்

தெற்கில் இருந்து 34 வர்த்தக அங்கத்தவர்களைக் கொண்ட குழு எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்கின்றது.

**தூதுக்குழுவின் ஆர்வமுள்ள விற்பனைப் பொருள்கள் வருமாறு:-**

கண்ணாடி, ரயர்கள், பற்றறிகள், ஓட்டோ உதிரிப்பாகங்கள், மறுசீரமைப்புச் செய்யப்பட மெசி பெர்குஷன் டிரக்டர்கள், சிமெந்து, வாகனங்கள், எலெக்றிக் தராசுகள், காற்றோட்டம் ஏற்படுத்தும் உபகரணங்கள் (வென்ரிலேஷன் இக்குப்மென்ற்), குளிரூட்டிக் கண்ணாடி, உரம், கடதாசி, துணி வகைகள், தைக்கப்பட்ட ஆடைகள், பேஸ் பந்து விளையாட்டுக்கான தொப்பி, றபர் பொருள்கள், மீன்பிடி வலைகள், நூல்கள், பொலி புறொலின் பைகள், ஜெனறேற்றர்கள், கட்டட அமைப்பிற்குப் பாவிக்கும் இயந்திரங்கள், கணனி மென்பொருள்கள், துவிச்சக்கர வண்டிகள், இரும்புப் பொருள்கள், நுளம்பு வலைகள், கணனிகள், திருட்டினைத் தெரியப்படுத்தும் சுங்கக் கருவிகள் ஆகியன.

**2. பின்வரும் சேவைகள்:-**

கடலில் வேண்டிய சேவைகள் வழங்குதல், விமான சேவை, சுற்றுலா ஏற்பாடுகள், நிதி வழங்கும் சேவைகள், காணிகள் மற்றும் உடைமைகள் விற்பனவு, குளிர்சாதனக் கருவிகள் பொருத்துதலும் அது தொடர்பான ஆலோசனைகள் வழங்குதலும், எயர் கொண்டிஷன் ஏற்படுத்துதல், கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்குதலும், கட்டட நிர்மாண சேவைகள், வின்ட் எனெர்ஜி சிஸ்ரம் தொடர்பான சேவைகள் ஆகியன வழங்குதல்.

இந்த தூதுக் குழுவினைச் சந்திக்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்:

**2002 மே மாதம் 16ஆம் திகதி**
**காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை -**
**யாழ்.வர்த்தக சம்மேளனம்,**
**165, மானிப்பாய் றோட்,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 021-2367**
**திரு. R.ஜெயசேகரன் (தலைவர்)**

**பிற்பகல் 2.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை -**
**வர்த்தக சம்மேளனமும்,**
**யாழ்ப்பாணம் கைத்தொழில் நிறுவனமும்.**
**கூட்டுறவுச் சங்க மண்டபம்.**
**தொலைபேசி: 021-3088**
**திரு. K.பூர்ணச்சந்திரன் (தலைவர்)**

**2002 மே மாதம் 17ஆம் திகதி**
**பிற்பகல் 2.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை -**
**யாழ்.வர்த்தக சம்மேளனம்**

(சி-22089) **- இலங்கை வர்த்தக சம்மேளனம்.**

## சின்னஞ்சிறு விளம்பரம்

### ஒரு காதலின் கதை

இலங்கை இனப்பிரச்சினையுடன் பின்னிப்பிணைந்த நாவல். 340 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் கைவண்ணத்தில் உருவானது. 50 ஆண்டுகளுக்கு முந்திய இலங்கைக்கு உங்களைக் கொண்டு செல்லும். (3616)

### வாடகைக்கு

யாழ்.நகரில் கஸ்தூரியார் வீதியில் விற்பனை நிலையமாகவும், சகல வசதிகளுடன் வீடாகவும் பாவிக்கக் கூடிய கட்டடம் வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: இல.49, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (3677)

தட்டாதெரு சந்திக்கு அருகில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு: P.கமலாதேவி, 21, சீனியர் லேன், அரசடி வீதி, யாழ்ப்பாணம். T.P.2501. (3696)

### தேவை

நல்லூர், கந்தர்மடம், திருநெல்வேலி சுற்றாடலில் நீர், மின்சார வசதி கொண்ட வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை. தொடர்பு: விள.இல. 1515, மே/பா. உதயன். (3675)

### விற்பனைக்கு

பல இன கலர் மீன்கள், மீன் தொடடிகள், மீன்தொட்டிக்குரிய மோட்டர்கள், அழகுசாதனப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (3571)

பாவிக்கப்படாத புத்தம்புதிய லாண்ட்மாஸ்ரர் பெட்டி ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தநாகேஸ்வரன (பாப்பா), மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு, அம்மன் வீதி முகப்பு, உரும்பிராய் (3641)

மரத்தளபாட மேசைகள், கபேட், அலுமினியம் கண்ணாடியுடன் சோக்கேஸ்கள், படங்கள், புதிய தாய்வான் பிறேம் தடி வகைகள், கண்ணாடி மேசை என்பன விற்பனைக்குண்டு. 216, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (இலுப்பையடிச் சந்திக்கு அருகில்). (3662)

25 அடி நீளம் 5 1/2 அடி சுற்றுள்ள பாலை மரம், 10 அடி நீளம் 7 1/2 அடி உயரமுடைய கடைப் பாவனைக்குகந்த முதிரை அலுமாரி, 1HP ஐஸ் பாத் கொம்பிறெசர் என்பன விற்பனைக்கு உண்டு. க.சுகுமார், 103, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.2485. (3689)

ஜெனரேற்ரர் HONDA - G 450 3.5 HP (2200W) JAPAN, TVS - HERO GIZMO சிறிய ரக மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.நந்தசீலன், பிப்பிலிச் சந்தி, டச் வீதி, மானிப்பாய். (3698)

### பசுமாடு திருட்டு

கொக்குவில்,மே13

தாவடி பத்திரகாளி கோவில் வீதியில் உள்ள வீடொன்றினுள் நள்ளிரவு வேளை புகுந்த திருடர் கோஷ்டி ஒன்று அங்கு கட்டப்பட்டிருந்த பசுமாடு ஒன்றை திருடிச் சென்றுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-றி)


**கீழ்வரும் ஆள்கள் தேவை**

1. கணக்கியல் பயிலுநர்கள்
2. சிற்றூழியர்

(கல்வித்தகைமை தேவையில்லை)

இல:140, பலாலி வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,
**நேரில் சமுகம் தரவும்.**

(3702)


# ஏ-9 பாதை திறந்த பின்னர்....

**ஏ-9 பாதை திறந்த பின்னர் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக கடந்த 5ஆம் திகதி 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையில் வெளியான கட்டுரையை அடிப்படையாகக் கொண்ட ஆக்கம் இது.**

22.02.2002.

மறக்கமுடியாத ஒரு திகதி இது. இரண்டுகள் பல சேர்ந்து ஒன்றான நாள். ஐந்து இரண்டுகள் கூட்டப்பட்டு ஒன்றாகிய நாள். எண் கணித சோதிடப்படி 2+2+2+2+2=10 - 0+1 = 1.

அரசியலில் இரண்டு துருவங்களாக இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளும், ஐக்கிய தேசிய முன்னணி அரசும் ஒன்றுபட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திய நாள். ஒன்றோடு ஒன்று மிரண்டு மிரண்டு முரண்டு பிடித்தவர்கள் ஒன்றித்த நாள். வடக்குக் கிழக்கில் வாழுகின்ற தமிழர்கள் மாத்திரமின்றி புலம்பெயர்ந்து வாழுகின்ற ஒவ்வொரு ஈழத்தமிழன் வயிற்றிலும் பால் வார்த்த நாள்.

"பிரச்சினைகள் மக்களை - மக்கள தொடர்பினை இறுக்கமடையச் செய்கின்றன" என்பது சமூகவியல் கருத்து. வடபகுதி மக்களை பொறுத்தளவில் இது உறுதியாகிவிட்டது.

இராமன் அயோத்தி விட்டு காடேகியமை சோக நிகழ்வாக இருந்தபோதிலும் அதன் பின்னர் நடைபெற்று முடிந்த பலவும் இராமனின் புகழ் பரபபும் சம்பவங்களாகவே அமைந்தன. அதுபோலவே யுத்தத்தால் நாம் பெற்ற துன்பங்களெல்லாம் வடுக்களல்ல. சாதனையின் சுவடுகள். மறக்கமுடியாதவை.

குடாநாட்டு மக்கள் ஒரு தாய் மக்கள் போன்று கைகோத்து வாழ்ந்தது அனைவருக்கும் தெரிந்ததே. ஆயினும் உள்நாட்டு போர் மக்களை நாலா புறமும் விரட்டியது. விரும்பியோ விரும்பாமலோ குடும்பங்களில் கூட பிரிவு. "அந்த நாளும் வந்திடாதோ" என்ற அங்கலாய்ப்பு அனைவரிடமும். புலம்பெயர்ந்தோர் பலரிடமும் மண் வாசனை அற்றுவிட்டது. அதிக பணம், அதிக வசதிகள், கட்டுப்பாடற்ற வாழ்க்கை, முதியோர்/பெற்றோர் தலையீடின்மை ஆகியன இளைஞர் சமுதாயத்தில் கலாசார மாற்றத்தை உண்டுபண்ணியது.



இடம்பெயர்ந்த, புலம்பெயர்ந்த ஒவ்வொரு முதியோர் மனதிலும், 'சீ' இதென்ன வாழ்க்கை? எங்கள் கிணற்றுப் பச்சைத் தண்ணியைக் குடித்துக் கொண்டே வாழலாமே' என்ற ஆதங்கம்.

### புதிய கலக்கம்

இந்த நிலையில்தான் ஏ-9 பாதை திறக்கப்பட்டது. சண்டையினால் உயிரிழப்புகளால், சாதிக்கமுடியாததை இணக்கப்பாடு, அமைதி முயற்சி ஆகியவை சமாதானமாகச் செய்து முடித்திருக்கின்றன.

குடாநாட்டு மக்களின் கற்பனைப் பொருள்களெல்லாம் இன்று யாழ்நடை பாதையில் கிடக்கின்றன. ஆனால் புதிய கலக்கமொன்று குடாநாட்டு மக்கள் மனதில். வெளிக் கலாசாரமும் வடக்குக்கு வந்துவிடுமா?

காற்றோட்டமான இயல்புக் கிராம வாழ்க்கை, உடுப்புக் கழற்றாத குளிரூட்டப்பட்ட வாழ்க்கையாகிவிடுமா?

இளைய சமுதாயத்தின் மத்தியில் மகிழ்ச்சி ஆரவாரம் - இவ்வருடம் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவி ஒருவர் கூறும்போது:-

'இந்த மாற்றத்தை நான் பெரிதும் விரும்புகிறேன். அது பரபரப்பூட்டுவதும் எதிர்கொள்ளக்கூடியதும் ஆகும. வயது முதிர்ந்தவர்களுக்கு இது வயிற்றில் புளி கரைப்பதாக இருந்தாலும், நம்போன்ற இளையசமுதாயத்தினர் இதை அறைகூவலாக ஏற்க வேண்டும். நல்லது, கெட்டதை இனம காணும் மனப்பக்குவத்தை நாமே வளர்க்க வேண்டும்' என்றார்.

விடுதலைப் புலிகள் தலைமையின் கீழ் நீங்கள் வாழ விரும்புகிறீர்களா என்று இளைய தலைமுறையிடம் வினாவினால் "நிச்சயமாக. சட்டம், ஒழுங்கை நிச்சயமாக அவர்கள நிலைநாட்டுவார்கள். நடுநிசியிலும் பெண்கள் வீதிகளில் சுதந்திரமாக நடமாடமுடியும். எமது சமூகத்திலுள்ள ஆண்களே அதிகம் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறார்கள். இதை விடுதலைப் புலிகள் பொறுத்துக்கொண்டு இருக்கமாட்டார்கள். உரிய நடவடிக்கை எடுத்து பெண்களை அவர்கள் காப்பார்கள்" என்று பதில் வருகிறது.

கற்பனையும் கனவுமாக எட்டாது நின்ற பட்டாசு கூட இப்போது காலடியில், தலைமாட்டில் வெடிக்கிறது. 'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது' என்பதாக இந்தச் சீண்டல்கள் பலருக்கு வேதனையை அளிக்கிறது.

### உல்லாச விடுதிகள்

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல எம்முன்னே வந்து சேர்ந்திருக்கும் மற்றொரு விடயம். உல்லாசப் பயணத்துறை. கலாசாரத்தை உருக்குலைக்கும் முக்கிய காரணி இது. வல்வெட்டித்துறையில் உல்லாச விடுதி. காரைநகரில் மற்றொன்று. காங்கேசன்துறை விதிவிலக்கா? முறிகண்டிப பிளளையார் அருகேயும் உல்லாச வசதிகள்.

கொழும்பு நீர்ப்பாசன திணைக்களத்தில் பல ஆண்டுகளாக அதிகாரியாக பணிபுரியும் தமிழர் ஒருவரின் கருத்தின்படி 'இது யாழ்ப்பாண சமூகத்திற்கு - கலாசாரத்திற்கு - விடுக்கபடும் சவாலே தவிர வளர்ச்சிப்படியல்ல'.

அதேசமயம், முகாமைத்துவ பயிற்சிநெறியில் உள்ள 22 வயது பயிலுநரின் கருத்துப்படி 'இது வளர்ச்சிப் பாதையின் படிக்கல்'.

அநாயாசமாக உட்புகுந்து இருக்கும் மற்றொன்று ஆபாசப் படங்கள். இளவட்டங்கள் மனங்களை சீரழிக்கும். இவை சமுதாய சீர்கொல்லிகளாக சஞ்சலத்தையும் ஏற்படுத்துகின்றன. இவற்றை ஒழிக்க நடவடிக்கை தொடங்கிவிட்டமை ஆறுதல் அளிக்கும் விடயமாகும்.

### மது அரக்கன்

சமுதாய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பவை மது மற்றும் போதைப் பொருள்கள். பேதைகளைக் கூட உபாதைப்படுத்துவன. இவை புள்ளி விவரங்களின்படி மாதாந்தம் 25,000 சாராயப் போத்தல்கள் தெற்கிலிருந்து வடக்கிற்கு தடையின்றி வருகின்றன. இது மட்டுமன்றி 25,000 போத்தல் உள்ளூர் பனஞ்சாராயம் மாதந்தோறும் விற்பனையாகின்றன. ஆயிரக்கணக்கான கலன்கள் பனங்கள் நாள்தோறும் சீவப்படுகின்றன. இவை மட்டுமன்றி கசிப்பு என்ற ஆட்கொல்லி பட்டிதொட்டியெல்லாம் மிக

## தலைமுறை இடைவெளியால் சமூகத்தில் முரண்பாடுகள்

வும் மலிவான விலையில் பெறக்கூடியதாக இருக்கின்றது. மிகக் குறைந்த வருமானம் பெறுவோருக்கு இதுவே சோமபானம்.

யுத்தம் தந்த அடுத்த பரிசு விபசாரம். வடக்கு வானம் பார்த்த பூமி. அத்துடன் மானம் காத்த பூமியும் கூட. ஆனால் காசேதான் கடவுளடா என்று ஆகிவிட்டதால் - வறுமையின் பிடியில் பசி வந்திடப் பத்தும் பறந்துவிட்ட நிலையில் - பாழும் பூமியில் மானத்தை விற்போர் அதிகரித்து விட்டனர்.

தனியார் நிறுவனம் ஒன்றில் பாதுகாப்பு உத்தியோகத்தராக இருக்கின்ற முப்பதுகளின் இறுதி வயதில் உள்ள 3 பிள்ளைகளின் தந்தை ஒருவர், தன்னுடைய வாழ்நாளில் இப்படிச் சீர்கேடான வாழ்க்கையைக் காணவில்லை என்று அங்கலாய்க்கின்றார்.

ஒட்டுமொத்தமாக ஒழுக்கத்தைப் பேணும் குடும்ப வாழ்க்கை, குடும்ப நேசம் அற்றுவிடுமோ என்ற பயம் பலரையும் வாட்டுகிறது. விடுதலைப் புலிகள் நிர்வாகத்தில் கட்டுப்பாடு பேணப்படும் என்ற திடமான மனப்பான்மை பரவலாகக் காணப்படுகின்றது.

### தில்லுமுல்லு நடக்காது

இதேசமயம் புலிகளின் நிர்வாகத்தில் முன்னைய காலத்தைப் போல 'வரிப் பளு' தம்மை அழுத்தக்கூடும் என்ற கவலையும் குடாநாட்டினர் மத்தியில் இல்லாமல் இல்லை.

கடற்றொழில் தொடர்பான நிறுவனமொன்றின் பொதுமுகாமையாளர் மற்றும் அவரது மனைவி ஆகியோரின் அபிப்பிராயமும் அதுவே. ஆனால் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் தில்லுமுல்லுகள் இடம்பெறாது என்பதே அவர்கள் ஆணித்தரமாக நம்புகின்றார்கள்.

வர்த்தகத்தை மேம்படுத்தப் பலரும் முனைவது வரவேற்கத்தக்கதே. ஆனால் விவசாயத்தையே மூலாதார வாழ்க்கையாக நம்பி வாழ்ந்த விவசாயிகளின் நிலைதான் பரிதாபம். தடிமனும், தலையிடியும் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும். உற்பத்திச் செலவீனம் அதிகம். உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்புக் குறைவு. விவசாய நிலங்கள் பலவும் இராணுவ பாதுகாப்பு வலயத்தில். இயல்பு வாழ்க்கை இல்லை. இராணுவம் விலக்கிக் கொண்ட இடங்களில் கண்ணிவெடிக் கலக்கம்.

### விவசாயி வேதனை

குடாநாட்டின் நீண்டகாலமாகப் பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயி ஒருவர் தகவல் தருகையில், 'முறையாகச் சொன்னால் எம்மிடம் ஒன்றுமில்லை. போதிய முதலீடு இல்லை. விவசாய உபகரணங்கள் இல்லை. கிருமிநாசினி, உரங்கள் இல்லை. நல்ல விதைநெல் கூட இல்லை. புதிய முறைகளை அறிமுகம் செய்ய உரிய உத்தியோகத்தர் இல்லை. கஷ்டப்பட்டு விவசாயம் மேற்கொண்டு கடனாளி ஆகிறதுதான் மிச்சம். இதனிலும் பார்க்கச் சிவனே! என்று இருக்கலாம்' என்று கூறினார். பல விவசாயிகளின் பிரலாபமும் இதுதான்.

கல்விச் சமூகத்தில் தகவல் தொழில்நுட்பம் பல்கிப் பெருகிவிட்டது. கணனி, இணையத்தளம் ஆகியன வீட்டுக்கு வீடு என்னும் அளவுக்கு பெருகிவிட்டன. இளைய தலைமுறை மட்டுமன்றி பலரும் கணனிப் பயிற்சி பெறப் படையெடுக்கின்றனர்.

கணனிப் பயிற்சி நிலையங்கள் போட்டாபோட்டியிட்டு சலுகைக் கட்டணத்துடன் ஆர்வலரை அரவணைக்க முயற்சிக்கின்றன. இதற்கு மத்திய தர வர்க்கத்தினர் அல்லோலகல்லோலப்படுகின்றனர்.

மிகைப்படுத்தாது கூறில் மனப் போராட்டமும், பணப் போராட்டமுமே இப்போது குடாநாட்டில் அதிகரித்திருக்கின்றன. இதனைப் பயன்படுத்த பல நிறுவனங்கள் குறி வைக்கின்றன.

யாழ்ப்பாண மக்களில் கருணை, காருண்யம் காண்பிப்பதில் இந்த நிறுவனங்களிடையே போட்டாபோட்டி. 'சோழியன் குடுமி சும்மா ஆடுமா? ஒவ்வொருவர் மனதிலும் இலாப நோக்கு. வியாபாரம் என்ற போர்வையில் முதலிடுவதிலும் பணம் ஈட்டுவதிலும் முண்டியடிப்பு.

இது தாமும் வாழ்ந்து சமுதாயத்தையும் வாழவைக்குமாகில் வரவேற்கக்கூடியதே.

**மகேஷ்**

ஆனால் இன்று குடாநாட்டு மக்கள் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டியது "வேடனும் புறாக்களும்" கதை.

"வலையின் கீழ் இருந்த தானியங்கள் புறாக்களைக் கவர்ந்தன. பசியொரு புறம்; அவசரம் மறுபுறம். தலைமைப் புறாவின் எச்சரிக்கை நிராகரிக்கப்பட்டுப் புறாக்கள் வலையில் சிக்கின. கடைசியில் இனப் பற்றோடு தலைமைப் புறாவும் தானாக வந்து வலையில் சிக்கியது. இறுதியில் சாதுர்யமான ஆலோசனை தலைமைப் புறாவிடமிருந்து வந்தது.

'எல்லோரும் சேர்ந்து வலையுடன் பறப்போமா?'

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை உணர்த்தும் கதை இது.

இதுவே இப்போது குடாநாட்டினர் எண்ணவேண்டிய நீதி.

☆


அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

### சித்திரபானு வருஷ

## மஹோற்சவம் - 2002

மேற்படி ஆலய மஹோற்சவம் (16.05.2002) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி (27.05.2002) திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் பூர்த்தியாகும்.

**திருவிழா விஞ்ஞாபனம்**

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 16.05.2002 | வியாழக்கிழமை | மு.ப.11.00 |
| சப்பறம் | 24.05.2002 | வெள்ளிக்கிழமை | இரவு 8.00 |
| தேர் | 25.05.2002 | சனிக்கிழமை | மு.ப.8.45 |
| தீர்த்தம் | 26.05.2002 | ஞாயிற்றுக்கிழமை | மு.ப.10.00 |
| பூங்காவனம் | 27.05.2002 | திங்கட்கிழமை | இரவு 8.00 |

மஹோற்சவக் கடைகளுக்குரிய விண்ணப்பங்கள் 12.05.2002வரை ஏற்றுக்கொள்ளப்படும். 14.05.2002இல் கடைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

கும்பழாவளை, அளவெட்டி. (3700) - தர்மகர்த்தாக்கள் சபை.



## 90ஆம் நாள் நினைவஞ்சலி



**பாலசுப்பிரமணியம் அருந்தவராசா**

(அறம்)

(நவாலி வடக்கு புலவர் முகாம்)

தோற்றம் 28-08-1975 மறைவு 15-02-2002

அன்பின் திருவுருவாய்
பண்பின் பிறப்பிடமாய் விளங்கி
எம்மை விட்டுப் பிரிந்து
எத்தனை நாள்கள் சென்றிடினும்
உங்கள் நினைவு என்றும்
எம்முடன் உயிர் வாழும்.

உங்கள் பிரிவால் வாடும்:
ரஞ்சன் குடும்பம்.

நவாலி. (3703)

# சமய சந்நிதிகளில்

அளவெட்டி,மே13

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய புனருத்தாரண செயற்பாடுகளுக்குப் பின்பு நடைபெறவுள்ள முதலாவது திருவிழா இதுவாகும். (ஐ-13-ரி)

★ ★ ★

சண்டிலிப்பாய்,மே13

சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இம்மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (ஐ-135)

★ ★ ★

பண்டத்தரிப்பு புனித பற்றிமா மாதா ஆலய வருடாந்த திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 7மணிக்கு நடைபெறும். திருப்பலி பூசை ஒப்புக்கொடுப்பதைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை பண்டத்தரிப்பு பங்குத்தந்தை செய்துள்ளார். (ஐ-135)

★ ★ ★

தாவடி,மே13

கோண்டாவில் மேற்கு, உப்புமடச்சந்தி ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 25ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

மஹோற்வச தினங்களில் தினமும் மாலை 6 மணிமுதல் 'விநாயக புராணம்' என்னும் பொருள்பற்றி தொடர் சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (எ-ரி)

★ ★ ★

செம்பியன்பற்று,மே13

செம்பியன்பற்று புனித பிலிப் மேரியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

26ஆம் திகதி காலை 7 மணி முதல் திருநாள் பூசையும், திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் இடம்பெறும். (எ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,13

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் பூங்காவன உற்சவம் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும்.

திருக்கல்யாணத்தைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சியும் நடைபெறும். (ஐ)


## தொடர்பு கொள்ளவும்

மணிக்கூட்டுச் செயின்கள், கவரிங் நகைகளுக்கு நவீன எலற்றோனிக் கருவிகளின் உதவியுடன் தங்க முலாம் பூசி மெருகூட்டிக் கொடுக்கப்படும். உத்தரவாதமும் உண்டு.

**கதிரவன் ஜெம்ஸ் சென்ரர்,**
213/1, கஸ்தூரியார் வீதி
(ராஜா தியேட்டர் அருகிலுள்ள ஒழுங்கை),
யாழ்ப்பாணம்.
(3716)

## லாலா
நிறுவனத்தின்
அன்பு அறிவிப்பு!

தற்போதைய சூழ்நிலையில் எந்தவொரு நிகழ்வுக்கும் நன்கொடையோ விளம்பரமோ வழங்கமுடியாத நிலை! (உற்பத்திப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக) தயவுசெய்து மன்னிக்கவும்.
(C/22065)
லாலா அச்சுவேலி.


# கூறுவிலை கோரல்

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய புனரமைப்பு வேலைகள் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் சார்பில் தகுதியானவர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகிறது.

01. ஆலய உட்பிரகாரத் தூபிகள், உள் மண்டபங்கள், வெளி மண்டப மணிக்கோபுரம், நுழைவாயில் அலங்கார வளைவு, சண்முகர் வெளி மண்டபம் என்பவற்றிற்கு வர்ண வேலை செய்தலும், தேவையான வர்ணங்களை வழங்குதலும்.
02. ஆலயக் கலசங்கள், கொடித்தம்பம் என்பவற்றிற்கு வெள்ளி முலாம் (பிளேற்றிங்) பூசுதல்

இவை தொடர்பாக மேலதிக விவரங்களை மேற்படி ஆலயத்திற்கு நேரடியாக வருகைதந்து பார்வையிட்டு ஆலயப் பணிமனையில் விண்ணப்பப்பத்திரத்தைப் பெற்றுப் பூர்த்திசெய்து 19.05.2002 இற்கு முன் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியினுள் சேர்ப்பிக்கவும்.

பெறுநர் மேற்பார்வைக்குழு

மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபைத் தலைவர்.

(3717)

## அனலையம்பதி
## ஸ்ரீ எழுமங்கை மனோன்மணி [நாச்சிமார்] அம்பாள் திருக்கோவில்



## மஹோற்சவ விஞ்ஞாபனம் ~ 2002
## திருவிழா நிகழ்வுகள்

- 16.05.2002 வியாழக்கிழமை மாலை 5.00மணிக்கு மஹோற்சவ பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பம்
- 17.05.2002 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00மணியளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்)
- 22.05.2002 புதன்கிழமை மாலை மஞ்சத் திருவிழா
- 23.05.2002 வியாழக்கிழமை மாலை வேட்டைத் திருவிழா
- 24.05.2002 வெள்ளிக்கிழமை மாலை சப்பரத் திருவிழா
- 25.05.2002 சனிக்கிழமை காலை தேர்த்திருவிழா
- 26.05.2002 ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தத்திருவிழா மாலை துவஜா அவரோகணம் (கொடியிறக்கம்)
- 27.05.2002 திங்கட்கிழமை காலை பிராயச்சித்த அபிஷேகம் மாலை வைரவர் சாந்தி பூசை

அனலைதீவு
ஸ்ரீ எழுமங்கை மனோன்மணி (நாச்சிமார்) அம்பாள் திருக்கோவில்
அறங்காவலர் சபை.
(3711)

## கையெழுத்து பிரதிவெளியீடு

இணுவில்,மே13

கோண்டாவில் வடக்கு ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையத்தின் கல்வி வளர்ச்சிக் கழகத்தினர் கையெழுத்துப் பிரதி ஒன்றை வெளியிடவுள்ளனர்.

மாணவர்களிடம் இருந்து பெறப்படும் கவிதை, கட்டுரை, சிறுகதை, குறுநாடகம் என்பன இந்தக் கையெழுத்துப் பிரதியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

## தலையில் சுமந்து வீடுவீடாகச் சென்று கோழிக்குஞ்சு விற்பனை

அரியாலை,மே13

தெற்கில் இருந்து வியாபாரிகளால் கொண்டுவரப்பட்ட கோழிக் குஞ்சுகள் யாழ்நகரை அண்டிய பகுதிளில் வீதிகள், ஒழுங்கைகள் தோறும் காவிச் சென்று விற்கப்பட்டு வருகின்றன.

பெட்டிகளில் வைத்து - தலையில் சுமந்தவாறு - கால்நடையாகச் சென்று - பாஷையூர், குருநகர், சுண்டுக்குளி பகுதிகளில் இவர்கள் கோழிக்குஞ்சு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சேவல் குஞ்சு ஒன்று 15 ரூபாவாகவும் பேட்டுக்குஞ்சு ஒன்று 25 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது. (க-17)

## மீனவர் சமாச அலுவலகம் தாளையடியில்!

பருத்தித்துறையில் இயங்கிவந்த வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நாளைமறுதினம் புதன்கிழமை முதல மீண்டும் தாளையடியில் இயங்கவுள்ளது. (க-12-ரி)

## தொலைக்காட்சியில் நாட்டுக்கூத்து ஒளிபரப்பு

செல்லையா மெற்றாஸ்மயிலின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'வேழம்படுத்த வீராங்கனை' நாட்டுக்கூத்து இன்று மாலை 6 மணிக்கு ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படவிருக்கின்றது. (ஐ-3)


## SALE OF PRINTING MACHINES

- HEIDELBERG KORD
- HEIDELBERG KOR
- HEIDELBERG PLATTEN
- CHINESE PAPER CUTTER 36"
- INDIAN PAPER CUTTER 42"
- PLATE MAKERS

Contact: Mr.NELSON,
732, Maradana Road,
Colombo 10.
Tel.: 694538 / 693730
(3709)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
LEONARDO DIC APRIO,
KATE WINSELT
டைட்டானிக்
தமிழாக்கம்
(C-21981)

ராஜா யாழ்ப்பாணம்
5ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
(C/21980)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த் (இருவேடங்கள்)
சிம்ரன், நாசர், கபாலி
நடிப்பில்
கண்ணுபடப்போகுதையா
(ரீஸ்ஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (பு.நே.)
(3681)

லஷ்சுமி இணுவில்.
ரஜனி, நக்மா, ரகுவரன்
நடித்த
பாட்ஷா
(ரீஸ்ஸ்)
காட்சிகள்-10.30,2.30 (ப.நே.)
(3713)


# வேலை வாய்ப்புக் கொள்கை அடுத்த மாதம் நாடாளுமன்றில்

கெழும்பு,மே13

தேசிய வேலை வாய்ப்புக்கொள்கை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

உள்ளூர் வேலை வாய்ப்புச் சந்தைகளிலும், வெளியூர் வேலை வாய்ப்புச் சந்தைகளிலும் இருந்துவரும் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்தக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுக்கு சிறந்த தொழிற பயிற்சியையும், மொழிப்பயிற்சியையும் வழங்குவதற்கு புதிய கொள்கைத் திட்டம் வழிசெய்யும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

## யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மே13

நல்லை திருஞானசம்பந்தர் ஆதனத்தில் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6மணி முதல் மாலை 7மணிவரை ஆண், பெண் இருபாலாருக்கும் யோகாசன வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன. (ஐ)

## விடைத்தாள் திருத்தப்பணியில் ஈடுபடுவோருக்கு!

யாழ்ப்பாணம்,மே13

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிக்கு நியமிக்கப்பட்டவர்களில் நேற்று தமது வரவை உறுதிப்படுத்தாதவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்குச் சமுகம் தந்து வரவை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.(க-11)

## தவறிவிட்டது

கடந்த 09.05.2002 வியாழக்கிழமை முகமாலை சோதனைச் சாவடிக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையில் பெறுமதியான உடுப்புகளுடன் கூடிய கறுப்பு பாக் தவறவிடப்பட்டுள்ளது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**உதயன் கொமியூனிகேசன்**
இணுவில். 021-3624
(3708)

## கண்ணீர் அஞ்சலி

அனலைதீவைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி சிவப்பிரகாசம் சரஸ்வதி (நாகம்மா)**

அவர்கள் 2002.05.04 சனிக்கிழமை காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

அனலைதீவு எழுமங்கை நாச்சிமார் தேவஸ்தான
அறங்காவலர் சபை.
(3712)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பார்வதி வல்லிபுரம்

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த திருமதி பார்வதி வல்லிபுரம் நேற்று முன்தினம் (11.05.2002) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் அவர்களின் அன்பு மனைவியும், நடராசா, நவரத்தினம், சபாரத்தினம் (டென்மார்க்), சுப்பிரமணியம் (டென்மார்க்), பாலசிங்கம் (யா/மருத்துவபீடம்), தவமலர் (சுவீடன்), இராசேஸ்வரி (ஜேர்மனி), சரோஜா, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசலிங்கம் (சுவீடன்), சிவராசா (ஜேர்மனி), செல்வராசா (சுவிஸ்), ஸ்ரீகாந்தன் (ரெலிக்கொம்), சரஸ்வதி, செல்வராணி, செல்லக்கிளி (டென்மார்க்), யோகராணி (டென்மார்க்), ஜெனதா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
வ.பாலசிங்கம்
(மகன்)
(3707)

## திருமதி இலட்சுமி கந்தையா

மீசாலை கிழக்கைச் சேர்ந்த இலட்சுமி கந்தையா நேற்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் செல்வரட்ணம் (சுவிஸ்), பஞ்சாட்சரம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் றஞ்சினி (சுவிஸ்), றமேதினி (உமா - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2002) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு,*
*மதவடி றோட்,*
*மீசாலை.*

தகவல்:
வா.பத்மநாதன் (பெறாமகன்),
கற்பகம் (பெறாமகள்).
(3714)

## தம்பிராசா சதீஸ் சந்திரன்

பாரதி வீதி, நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா சதீஸ் சந்திரன் நேற்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிராசா - இராசபூபதியின் அன்புப் புதல்வனும் செல்வச்சந்திரன், பிரபாசங்கரி (பஹ்ரெய்ன்), வாசுகி, சுதாகர் (கடற்றொழிலாளர் புரிசோதகர் - கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம்), சுகந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் உமத்திரன், வசந்தாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாரதி வீதி,*
*நாயன்மார்கட்டு.*

தகவல்:
த.சுதாகர்
(சகோதரன்)
(3719)

# கன்னியா இந்து ஆலய புனரமைப்பு; பிக்குகள் தலையீட்டால் நிறுத்தம்

திருகோணமலை,மே13

சரித்திரப் பிரசித்திபெற்ற திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் பிக்குகளின் தலையீட்டை அடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன.

ஆலயப் புனரமைப்பு வேலைகளை இடைநிறுத்துமாறு திருமலை அரச அதிபர் என்.எச்.கே.நெலும் தேனிய உத்தரவிட்டிருக்கிறார்.

ஆலயப் பகுதியில் காணப்படும் செங்கற்கள் அநுராதபுரம் காலத்துக்குரிய தொல்பொருள் சான்றுகள் என்று சேருவில ரஜமகா விகாரையின் பிரதமகுரு உட்பட பௌத்த தேரர்கள் அரச அதிபரிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஆலயத்தைப் புனரமைப்பதன் மூலம் அப்பகுதியில் காணப்படும் அநுராதபுரம் காலத்துச் சான்றுகள் அழிவுண்டு போகும் என்று அச்சம் தெரிவித்துள்ளனர்.

கன்னியா பிள்ளையார் ஆலயப் பகுதியில் காணப்படும் சான்றுகள் தொடர்பாக தொல்பொருளியலாளர்களின் அறிக்கை பெறும்வரை புனரமைப்பு வேலைகளை அனுமதிக்க வேண்டாம் என்று அவர்கள் அரச அதிபரிடம் கேட்டிருக்கின்றனர். இதனையடுத்தே வேலைகளை இடைநிறுத்துமாறு அரச அதிபர் உத்தரவிட்டிருக்கிறார்.

இறந்தவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளை நடத்துவதற்குப் பெயர்பெற்ற இந்த ஆலயம் இராவணன் காலத்தில் கட்டப்பட்டது என்று நம்பப்படுகிறது.

ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருப்பது குறித்து அங்குள்ள இந்துக்கள் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர். (ஐ-3)

# பேச்சுத் திகதி குறித்து பிரதமர் கூறிய தகவல்

கொழும்பு,மே13

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டு 90 நாள்கள் பூர்த்தியடையும் எதிர்வரும் 24ஆம் திகதிக்குப் பின்னரே நேரடிப் பேச்சுக்கான திகதி குறித்து முடிவு செய்யப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் ஜூன் மாதம் மூன்றாவது வாரத்தில் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் சாத்தியம் உள்ளது என்றும் அவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

புரிந்துணர்வு உடன்பாடு 90 நாளைப் பூர்த்தி செய்யும் போது, பல விடயங்களை நடைமுறைப் படுத்த வேண்டியுள்ளது. அந்த விடயங்களை நடைமுறைப்படுத்தும் போதே நேரடிப் பேச்சுக்கான திகதி குறித்தும் முடிவு செய்யப்படும் என்றும் பிரதமர் மேலும் கூறினார்.

தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பான இறுதித் தீர்மானம் அடுத்த 90 நாள்களுக்குள் எட்டப்படும் - என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியதாக இணையத் தளங்களில் முன்னர் செய்தி வெளியாகி இருந்தது.

அந்தச் செய்தி நேற்றைய உதயனிலும் வெளியாகி இருந்தது.

தாய்லாந்தில் உள்ள 'புக்கட்' **(Phuket)** என்ற உல்லாச விடுதியிலேயே அரசு - புலிகள் நேரடிப் பேச்சுகள் இடம்பெறும் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ-3)

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும்

# அரசமைப்புத் திருத்தத்துக்கு மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு

கொழும்பு,மே13

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சிப் படி வாக்களிக்க வசதி செய்வது ஆகிய விடயங்கள் தொடர்பான அரசமைப்புத் திருத்தச் சட்ட நகலைத் தாம் ஆதரிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்காமல் மனச்சாட்சிப்படி - விரும்பிய விடயங்களுக்கு ஆதரவாக - செயற்பட இந்தச் சட்டமூலம் உதவும் என்பதே தனது தனிப்பட்ட கருத்து ஆகும் என்று அவர் கூறினார்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் எனது தந்தையும் கட்சிதாவி புதிய கட்சியை ஆரம்பித்து சரித்திரம் படைத்துள்ளனர்.

"எதிர்க்கட்சியில் இருந்து 20பேர் அரசுத் தரப்புக்கு மாறினாலும் நாம் தான் எதிர்க்கட்சியாக இருப்போம். அரசுத் தரப்பில் இருந்து ஐந்துபேர் எம்முடன் இணைந்தால் நிலைமை, மறுவளமாக மாறிவிடும்" - என்றும் மஹிந்த ராஜபக்ஷ கூறினார். (ஐ-3)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருக்கிறார்.

- காலியில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் அமைச்சர் லொக்கு பண்டார உரையாற்றினார்.

கருத்துக்கணிப்புமூலம் மக்கள் ஆணை பெற்றுக்கொள்ளப்பட்ட பிறகே இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படும் என்று அவர் அப்போது கூறினார்.

"இடைக்கால நிர்வாக சபை குறித்து வரும் தேவையற்ற - ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை - பீதிகளை - கிளப்பக்கூடாது. விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை நிராகரித்துவிட்டு அவர்களைப் பேச்சுக்கு அழைத்த ஒரே ஒரு தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான்.

"நாடு பிரிக்கப்படுவதை இந்த அரசு ஒரு போதும் அனுமதிக்காது" - என்றார் அமைச்சர் லொக்கு பண்டார.

இந்த அரசு அதன் பதவிக்காலத்தில் சகல தேர்தல்களையும் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்தி முடிக்கும் என்றும் அவர் கூறினார். (ஐ-3-9)

## விளையாட்டரங்கு புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.துரையப்பா விளையாட்டரங்க திருத்த வேலைகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சு மேற்கொண்டு வருவதாகவும் கூறப்பட்டது. யாழ். செயலகம் மற்றும் மாநகர சபை அதிகாரிகள் இதற்கான மதிப்பீட்டை செய்திருந்தனர்.

விளையாட்டரங்கைச் சுற்றிவர மதில் அமைக்கும் வேலைகள் முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யம் ஆகிய நாடுகளின் ஆலோசனையைப் பெறவே பிரதமர் இந்த விஜயத்தை மேற்கொள்வதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (ஐ-3)

## ஐந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை நடத்தவும் அந்த அமைப்பு ஏற்பாடு செய்திருக்கிறது. முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிர மநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்கா, பொ.ஐ.மு. செயலாளர் டி.எம்.ஜயரத்ன உட்பட பல எம்.பிக்களும் முன்னாள் எம்.பிக்களும் இப்பூஜையில் கலந்து கொள்ளவிருக்கின்றனர். (ஐ-9)

## 35 மீனவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் பாய்ந்து நீச்சலடிக்கச் சொன்னது கொலை முயற்சிக்கு ஒப்பானது என்று கூறப்படுகின்றது.

செய்வதறியாது திகைத்து மீனவர்கள் ஆழ்கடலில் பாய்ந்து நீச்சலடித்துள்ளனர். நீச்சல் தெரியாதவர்கள் கூட பயத்தின் காரணமாக கடலில் குதித்துள்ளனர். இவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கையில் சக மீனவர்களால் காப்பாற்றப்பட்டிருகின்றனர். 10ஆம் திகதி திருமலையை வந்து சேர்ந்த மீனவர்கள், தமிழ் மீனவர் அமையத்தின் ஊடாக திருகோணமலை கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டுள்ளனர். (ஐ-9)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரண்பட்ட நிலை - மோதல் நிலை நிலவியது தெரியும். எனவே, இரண்டு தரப்புக்களுக்குமிடையே பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வழி வகை இருக்கிறது. அதைக் கடைப் பிடித்தாக வேண்டும். அதைக் கட்டியெழுப்பலாம் என்று நாம் நம்புகிறோம்.

உண்மையில், கடந்த வியாழக் கிழமை அந்த முடிவை நோக்கி முதலாவது அடியை நாம் எடுத்து வைத்தோம். பிறிகேட் தளபதிகள் வவுனியாவில் ஒன்றுகூடி கலந்துரை யாடினார்கள். இரண்டு தரப்புக்களுக்குமிடையே தொலைத்தொடர்புக்கு பொதுவான அலைவரிசை ஒன்றை நாம் ஒதுக்கவுள்ளோம். அதன்மூலம் இரண்டு தரப்பினரும் சந்திக்கும் பொழுது - விவகாரங்கள் தொடர்பாக பேசும் பொழுது - அவர்களுக்கிடையே நம்பிக்கை ஏற்படும். அப்படி பரஸ்பர நம்பிக்கையுடன் ஒத்துப்போகும் நிலை வரும்போது, அப்படியான போக்குவரத்தும் நடக்கும் என்று நான் கருதுகிறேன் - என்றார். (ஐ-9)

# புலிகளால் தொல்லை என்ற முறைப்பாட்டுக்கு மறுப்பு

கொழும்பு,மே13

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பின்னர், புலிகளால் தனக்கு தொல்லைகள் தொடர்வதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் எவ்வித உண்மையு மில்லை என்று மட்டக்களப்பைச் சேர்ந்த நொத்தாரிசான கே.பி.சிதம்பரப்பிள்ளை (வயது 82) தெரிவித்துள்ளார்.

புலிகளால் விடுவிக்கப்பட்ட பின்னர் தான் புலிகளின் தொந்தரவுகளுக்கு உள்ளாகிவருவதாக கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை தொடர்பாக செய்தியாளர்களுக்கு கருத்துக் கூறிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுத் தனது அலுவலகத்தில் உள்ளூர் பத்திரிகையாளர்களை அழைத்து அவர் மேலும் கூறியதாவது:-

புலிகளால் விடுவிக்கப்பட்ட பின்னர் எனக்கு எவ்வித தொல்லைகளும் இல்லை. புலிகளுக்கும் எனக்குமிடையே தற்போது நல்லுறவு உள்ளது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நான் எவ்வித முறைப்பாடும் தெரிவிக்கவுமில்லை. கடந்த வியாழக்கிழமை அதியமான் என்ற பெயரிலும் - தொலைபேசி அழைப்பும் -

வெள்ளிக்கிழமை தேவன் என்ற பெயரில் தந்தி ஒன்றும் -

எனக்குக் கிடைத்தன. இவை அநாமதேய அழைப்புக்களாக இருக்கலாம். இது பற்றி வெளிநாடுகளில் உள்ள எனது பிள்ளைகளுக்கு மட்டும் தான் நான் கூறினேன் - என்று சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

இவை தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை கண்காணிப்பாளரிடம் கேட்டபோது -

கே.பி.சிதம்பரப்பிள்ளை தம்மிடம் முறைப்பாடு எதுவும் செய்யவில்லை என்பதை அவர் ஒப்புக்கொண்டார்.

அவரது குடும்ப உறுப்பினர் ஒருவர்தான் இந்த முறைப்பாட்டைச் செய்தார். ஆனால், எழுத்து மூலம் அந்த முறைப்பாட்டை செய்யவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ-9)


**EXPRESSING THANKS**

THE JAFFNA DISTRICT AMATEUR ATHLETIC ASSOCIATION

Extend its Heartiest Thanks to

**Mr.P.H.D.WAIDYATILAKA**

*(Vice President/ Chairman, Technical Committee/ President, Athletic Technical Officials Association - Sri Lanka A.A.A.)*

And

**Mr.N.VYRAVANATHAN**

*(Chief Starter - Sri Lanka A.A.A.)*

For the services they rendered at Jaffna for the betterment of Sports.

(C/22091) Jaffna District A.A.A.

**BENTLEY**

Hotel & Catering Equipment

Bainmarie, Food Warmers, Hot'n Cold Displays, Deep Fryers, Stainless Steel Catering Equipment, Chafe Dishes, Soup Warmers

**For Trade & Sales Inquiries:**
51, First Cross Street,
Colombo 11.
Phone: 421734 Fax: 441740
Email: dasthi@sltnet.lk

(C-22077)

வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றம்

**ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டமும், நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும்**

*காலம்:* நாளை (14.05.2002) செவ்வாய்க்கிழமை
*நேரம்:* முற்பகல் 10.00மணி (புதிய நேரம்)
*இடம்:* யாழ்.மத்திய கல்லூரி (கேட்போர் கூடம்)

சகல பொதுச்சபைக் கூட்ட உறுப்பினர்களும் இந்நிகழ்வுக்கு தவறாது கலந்துகொள்ளுமாறும், மருந்தாளர் இல்லாத மருந்தகங்கள் தொடர்ந்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுக்கொண்டிருப்பது பற்றிய விடயம் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பிரமுகர்களும் (த.வி.புலிகள்) யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருடனும் கலந்துரையாடவுள்ளதால் தங்களின் வரவு மிக முக்கியமானதொன்றாகும். ஆகவே தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்கப்பெறாதவர்களும் இதை ஏற்றுக்கொண்டு, கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றம்

**தேவை**

தரம் 1-5 வரை
ஆசிரியர்கள் தேவை
தொடர்பு:
சைன் உடுவில். (3718)

**தேவை**

தொலைபேசி, போட்டோக் கொப்பி, கணனி வேலை செய்யக்கூடிய, தொழில் தெரிந்த, தொழில் பழக விரும்பும் O/L வரை படித்த
*பெண்கள் தேவை*
கணபதி கொமினிக்கேசன்,
*320, பலாலி வீதி,*
*ஆலடிச்சந்தி.*
(3697)

**கலந்துரையாடல்**

*பொருள்:*
புலம்பெயர்வுச் சூழலில்
தமிழ் நாடகப் போக்குகள்
**திரு.அ.தார்சீசியஸ்**
*(நடிகர், ஊடகவியலாளர்)*
*காலம்:* நாளை (14.05.2002) செவ்வாய்க்கிழமை
*நேரம்:* மாலை 5.15 மணி
*இடம்:* மன்ற கலைத்தூது மணி மண்டபம்
*ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம், - திருமறைக் கலாமன்றம்.
(C/22090)

**விரிவுரை**

"தகவல் தொழில்நுட்பத்தினூடான உள நலம்"

மன அலை - ஓர் அறிமுகம்
*வழங்குபவர்* - பேராசிரியர் தயா.சோமசுந்தரம்
*காலம்* - 14.05.2002 செவ்வாய்க்கிழமை மாலை 4.30
*இடம்* - விரிவுரை மண்டபம், மருத்துவபீடம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
மன அலை
Http://www.manaalaijaffna.org
(3720)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.